
JESUS NEVER FAILS
DIVINE GOOD NEWS CENTER

# ஜீவ மன்னா




## அனுதினமும்

2015 ஒக்டோபர்

49 வது வெளியீடு



# தேவ ஆவியின் வல்லமையால் அற்புதங்கள் நடக்கின்றது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# அட்டைப்பட விளக்கம்

## தேவ சபையில் அற்புதங்கள், அடையாளங்கள் அவசியம் நடைபெற வேண்டுமா?

அன்பார்ந்தவர்களே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜீவ மன்னா தின மஞ்சரி 49வது வெளியீட்டில் அட்டைப்படத்தின் விளக்கவுரையில் இன்றும் சில காரியங்களைக் குறித்து எழுதும்படியாக தேவன் கொடுத்த கிருபைக்காக முதற்கண் நன்றி கூறுகின்றேன். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! பரிசுத்த வேதாகமத்தில் தானியேல் 12:4இல் கூறப்பட்டுள்ளதாவது, "தானியேலாகிய நீயோவென்றால் முடிவு காலமட்டும் இந்த வார்த்தைகளைப் புதை பொருளாக வைத்து இந்தப் புஸ்தகத்தை முத்திரை போடு. அப்பொழுது அநேகர் இங்கும், அங்கும் ஓடி ஆராய்வார்கள். அறிவும் பெருகிப்போம்" என்றான் என்றே. அதன் கருத்து யுகம் முடிவில் ஜனங்கள் தேவனைக் குறித்த அறிவை பெருக்கிக் கொள்ள முனைவார்கள் என்பதாகவே.



தேவப் பிள்ளைகளே! நிகழ் காலத்தில் சிலர் அற்புதங்கள் அவசியமில்லை என்றும் தேவ வசனத்தை ஆழமாக அறிந்து கொள்ளல் அவசியம் என்றும் கூறி கிறிஸ்தவ பிள்ளைகள் வேத வசனங்களின் அறிவாற்றல் பெறும் வழியில் நடத்தப்பட வேண்டும் என்கிறார்கள். ஆனாலும் மாற்கு 16:17,18இல் விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள். வியாதியஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள். அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்று நம் இயேசுகிறிஸ்து கூறியிருக்கிறார். பரி.லூக்கா 10:19இல் இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன், ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது என்பதாக கூறப்பட்டுள்ளது.



தேவப் பிள்ளைகளே! இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் சாத்தான் விலகி ஓடு என்றும் 'பிசாசே போ' என்றும் போதகர் ஜோசப் அவர்கள் எப்போதும் கூறுகின்றார். ஆனாலும் அப்படி செய்ய அவசியமில்லை, வேத வசனத்தைக் கற்றுக் கொள்வதே மேலானது என்றும் விசுவாசிகள் குறைவாக இருக்கின்ற ஒரு சபையில் போதகர் கூறியதாகக் கேள்விப்பட்டேன். எங்கள் தேவ ஊழியங்களைக் குறித்து நன்றாக அறிந்த தேவப் பிள்ளைகள் அதைக் கேட்டு இயேசுகிறிஸ்து எங்களுக்கு செயல்படுத்தும்படியாகவே கூறி அதிகாரங்களையும் -மேற்கொள்ளும் வல்லமையைக் கொடுத்துள்ளமையால் நாம் அவைகளைக் கைக் கொள்ள வேண்டும். ஆனாலும் நீங்கள் அதை நிறைவேற்றத் தவறும் போது தேவனின் வசனத்திற்கூடாக, செய்கைக்கூடாக தேவனுடைய நாமத்தை மகிமையடையச் செய்கின்ற தேவ மனுஷரையும், தேவ ஊழியங்களையும் பற்றி இழிவாகப் பேசி குறைவாக மதிப்பீடு செய்யாதீர்கள் என்றும் கூறியிருக்கின்றார்கள்.

இலங்கையில் வாழ்கின்ற பலவித சமயத்தை பின்பற்றும் மனிதர்கள் மத்தியில் உலகில் முப்பத்து மூன்று கோடி தெய்வங்கள் இருக்கின்றார்கள் என விசுவாசிக்கின்றவர்கள் அநேகர் இருக்கின்றார்கள். ஆனாலும் மரணத்தை வென்று மூன்றாம் நாள் மரித்தோர்க்கிடையில் மீண்டுமாக எழுந்து எங்கள் மத்தியில் ஜீவிக்கின்றவராக வாசம் பண்ணும் ஒரே தேவன் இரட்சகரான இயேசுகிறிஸ்துவே! தேவன் எங்களுக்கு கூறியிருப்பது யோவான் 14:11இல் நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள். அப்படியில்லா விட்டாலும் என் கிரியைகளினிமித்தமாவது என்னை நம்புங்கள் என்றாகும். ஆகையால் தேவனை அறியாத

☞ அட்டைப்படத்தின் பின்பக்கத்தில் மறுபக்கத்தை பார்க்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிமை இயேசு ராஜனுக்கே

## ஆசிரியர் உரை

### உங்கள் ஆத்துமாவை பெலப்படுத்தும் தினமஞ்சரி!

கிறிஸ்துவுக்குள் அன்பான தேவப் பிள்ளைகளே.

இயேசுக்கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். **49வது ஜீவ மன்னா தின மஞ்சரியிற்கூடாக** உங்களை சந்திக்கக் கிடைத்த கிருபைக்காக தேவனுக்கே மகிமை உண்டாவதாக. இத் தினமஞ்சரியினால் மிகவும் நல்ல பலனை எங்கள் இலங்கை வாழ் சகோதர சகோதரிகள் பெற்றுவருவதை பெரும் மகிழ்ச்சியுடன் உங்களுக்கு தெரிவிக்கிறேன். ஒரு சகோதரி இவ்வாறாக சாட்சியை பகிர்ந்து கொண்டார். அவர் இரட்சிக்கப்பட்டு பல வருடங்கள் ஆத்துமிக பிள்ளையாக இருந்த போதிலும் எமது தின மஞ்சரியின் ஒரு பக்கத்தை மாத்திரமே வாசித்த வேளை பெருமகிழ்ச்சி அவரை ஆட்கொண்டது. முன்பைப் பார்க்கிலும் தைரியமாக ஆத்துமீக பயணத்தை தொடர்ந்து ஓடிட பலன் கிடைத்ததாகவும் கூறினார்.

அன்பார்ந்தவர்களே! இன்னுமாக முடிந்தளவு பலருக்கு மன்னா தினமஞ்சரியை அறிமுகப்படுத்துங்கள். விஷேட ஞாபக குறிப்பாக **நவம்பர் மாதம் 15வது** திகதி தேவ ராஜ்ஜியத்திற்கு **விதைப்பின் பெருவிழாவாக** நாங்கள் நியமித்திருக்கின்றோம் என்பதை அறியத்தருகின்றேன். இன்றைக்கு பல வருடங்கள் தொடக்கம் இக்காரியத்தை செய்து வருகின்றோம். விதைக்கும் திருநாளன்று தேவ இராஜ்ஜியத்திற்காக விதைத்து தேவப்பிள்ளைகள் அநேக ஆசீர்வாதங்களை தேவனிடமிருந்து கிடைக்கப் பெற்றதாக சாட்சி கூறுகின்றார்கள். நீங்களும் இந்த விஷேசித்த தினத்திற்கு இப்போதிருந்தே ஆயத்தப்படுங்கள்.

உங்கள் கொடுப்பனவுகளை **நவம்பர் 10ம் திகதி** எங்களுக்கு கிடைக்கச் செய்யுங்கள். நீங்கள் **கொமர்ஷல் வங்கியில்** உங்கள் கொடுப்பனவுகளை கணக்கிலக்கத்திற்கு வைப்பிலிட்டீர்களெனின் **வைப்பு பற்றுச்சீட்டை** எங்களுக்கு கிடைக்கும் படியாக செய்யுங்கள். அப்படியே காசுக்கட்டளைக்கூடாகவும் எமக்கு கிடைக்கச் செய்யலாம். ஆனாலும் நீங்கள் அப்படியாக அனுப்பும் போது உங்கள் **வாசகர் இலக்கத்தை (TM இலக்கம்)** எங்களுக்கு குறிப்பிட மறவாதீர்கள். இப்புத்தகத்திற்கூடாக நாளுக்குநாள் உங்கள் ஆத்துமா பெலன் பெற வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

**கர்த்தருடைய ராஜ்ஜியத்திற்கென்று விதைத்திடுவோர்!**
**முப்பது, அறுபது, நூறு என பலன் பெறுவர்!**
**விஷேசித்த விதைப்பின் பெருவிழா அன்று வந்திடுவீர்!**
**விதைத்திடுவீர் பலன் பெற்றிடுவீர்!**

இப்படிக்கு
**இயேசு கிறிஸ்துவுக்குள்**
போதகர் ஏ.ஜே.ஜோசப்
**இயேசு கைவிடார் சுவிஷேசப் பணியகம்**

**மன்னா வாசகர்களே TM இலக்கத்தை அனுப்ப மறந்துவிட வேண்டாம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஒக்டோபர்
01 வியாழன்

உங்கள் வாழ்வில்
இருள் நீங்கி மெய்யான
ஒளி பிரகாசிக்கும்!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 81 – 82

"ஏனென்றால், இருள் நீங்கிப்போகிறது, மெய்யான ஒளி இப்பொழுது பிரகாசிக்கிறது." (1 யோவான் 2:8)

அன்பார்ந்த தேவப் பிள்ளைகளே! இருளினின்று எம்மை மீட்டு ஒளியில் வழி நடத்தும் ஜீவிக்கின்ற **இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் மாதத்தின் முதல் நாளான இன்று அருமையான நாளாகும்படியாக வாழ்த்துகின்றேன்.** எங்கள் பேரில் தேவன் வைத்திருக்கும் அன்பை அளவிட முடியாது. நாம் அதனை அறிந்துக் கொண்டது பரலோகப் பிதாவின் ஒரே பேறான குமாரனான இயேசுகிறிஸ்துவை இவ்வுலகிற்கு அனுப்பி **சிலுவையில் தன்னுயிரை அர்ப்பணிக்கச்** செய்த மேன்மையான தியாகத்திற்கூடாகவே. இயேசுகிறிஸ்து அவருடைய மகன் என்றபடியால் **மரித்து மீண்டுமாக உயிர்த்தெழுந்து மகிமையடைந்தார்.**

தேவப் பிள்ளைகளே! எங்கள் வாழ்வின் தோல்விகளை வெற்றிப்படிக்கட்டுகளாக மாற்றும் வண்ணமாகவே அவ்வாறு **மரித்து மீண்டுமாக எழுந்து மரணத்தை வென்றார்.** ஆகையால் **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!** மேலே கூறப்பட்ட **1 யோவான் 2:8**இல் தேவ வசனத்தில் குறிப்பிடப்படுகின்றதாவது **"இருள் நீங்கிப் போகிறது மெய்யான ஒளி இப்பொழுது பிரகாசிக்கிறது"** என்றாகும். இருளும், ஒளியும் ஒரே இடத்தில் ஒன்றாக இருக்காது என்பதை நீங்கள் அறிவீர்கள். **ஒளி உதயமாகும் போது இருள் நீங்கிப் போகும்.** ஆகையால் மெய்யான ஒளியான இயேசு உங்களுக்குள் இருப்பாராகில் உங்கள் வாழ்வில், ஆத்மீகத்தில் உள்ள இருள் அகன்று போகும். ஆனாலும் **ஒரு மனிதன் பாவம் செய்வானாகில் அவன் இருளில் ஜீவிக்கின்றான். மனிதனது ஆத்துமாவானது அடிமைப்பட்டு, சிறைப்பட்டு இருக்குமானால் அவன் இருளில் வாழ்கிறான்.**

தேவப் பிள்ளைகளே! **1 யோவான் 2:16**இல் கூறப்படுகின்றதாவது ஏனெனில் **"மாம்சத்தின் இச்சையும், கண்களில் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்திலுண்டானவைகள்"** என்றே. உலகத்தைச் சார்ந்து வாழ்கிறவன் இருளில் இருக்கின்றான் என்பதை நாம் அறிந்தவர்களாயிருக்கின்றோம். மனிதனுக்கு அவனது வாழ்வில் காணப்படுகின்ற இருளினின்று மீட்பைப் பெற **இயேசுகிறிஸ்துவின் உபகாரம், உதவி, துணை அவசியமாகின்றது.** அதனால் தேவன் உங்கள் வாழ்வில் பிரவேசிக்க நீங்கள் இடங்கொடுக்க வேண்டும். **தேவன் உங்கள் அனுமதியின்றி உங்களுக்குள் எதனையுமே செய்யமாட்டார்.** ஆனாலும் "இயேசுவே நீங்கள் என் வாழ்வில் காணப்படுகின்ற இருளை நீக்கி விடுங்கள் என **ஜெபம் பண்ணுங்கள். இயேசுகிறிஸ்து உங்கள் வாழ்வில் இருளை நீக்கி ஒளியை உதிக்கச் செய்வார். வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! உங்கள் திருக்குமாரன் இயேசுகிறிஸ்து உலகத்திற்கு ஒளியாவார். தேவன் தேவ ஆவியானவரை என்னிடம் அனுப்பினீர். ஆகையால் என் வாழ்வில் இருள் அகன்று வாழ்வில் ஒளி பெறச் செய்தமையால் ஸ்தோத்திரம்! இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான்."
(1 யோவான் 3:9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஒக்டோபர்
**02** வெள்ளி

## இலக்கை நோக்கித் தொடர்ந்து முன்னானவைகளை நாடி வெற்றிப் பெறுங்கள்!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 83 – 84

**"...பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்."** (பிலிப்பியர் 3:13,14)

அன்பார்ந்த தேவப் பிள்ளைகளே! ஜீவிக்கின்ற **இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் இன்றைய நாளில் சமாதானத்தின் தேவன் உங்களை வழிநடத்திச் செல்லுமாறு வாழ்த்துகின்றேன்.** உங்கள் இரட்சகரான இயேசுகிறிஸ்துவுக்கூடாக உங்களைத் தம்மிடமாய் அழைத்துக் கொண்ட பரலோக தேவன் உங்கள் வழியில் **வெற்றிகரமாக முன்னோக்கிக் கொண்டுச் செல்ல கிரியை செய்வார்.** அவரது பரிசுத்த ஆவியானவருக்கூடாக உங்களை வழி நடத்துவார். ஆகையால் **உங்கள் உள்ளங் கலங்காதிருப்பதாக!**

தேவப் பிள்ளைகளே! மேலே கூறப்பட்ட **பிலிப்பியர் 3:13,14**இல் எழுதியிருப்பதாவது, **"நாம் பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கி ஓடுவது அவசியம்"** என்றே. உதாரணமாக உயரப் பாய்தல் போட்டிக்கு ஆயத்தப்படும் போட்டியாளரைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள். அந்தப் போட்டியாளர் ( போட்டிக்கு பங்கு கொள்ளும் முன்னர் அந்த போட்டியில் வெற்றி கொள்ளும் குறிக்கோளோடு **மிகவும் சிரமப்பட்டு மாதக்கணக்கில் பயிற்சி செய்து குறிக்கப்பட்ட காலங்களுக்கு முன்னே ஆயத்தப்படுவார்.** அவர்களுக்கு முதலிடம் பெற வேண்டுமென்ற எண்ணமே மேலோங்கி நிற்கும்.

தேவப் பிள்ளைகளே! ஆத்மீக வாழ்வைக் குறித்தும் இப்படியாக ஒரு **ஆழமான, உறுதியான இலக்கு உங்களுக்குள் இருக்க வேண்டும்.** அப்படியாக அந்த இலக்கை நோக்கி தொடருவதற்கு உங்களுக்குள் **பெரு முயற்சி, அர்ப்பணிப்பு காணப்படல் வேண்டும்.** அந்த இலக்கை நோக்கி தொடருகையில் முற்றுப் பெற முடியுமென்ற பூரண நம்பிக்கையை உருவாக்கிக் கொள்ளல் அவசியம். போட்டியின் போது போட்டியாளர் முதலாவது, இரண்டாவது கட்டங்களில் உயரப் பாய்ந்து மூன்றாவது பாயும் போது சிக்குண்டு இடறி விழவும் கூடும். இப்படியாக **உங்கள் ஆத்மீக பயணத்தில் உங்களுக்கு எதிராக வருகின்ற சவால்கள், தடைகள் காரணமாக நீங்கள் இடறி விழலாம்.** ஆனாலும் **உங்கள் உள்ளத்தை தைரியப்படுத்திக் கொள்ளுங்கள்!** தேவன் தனது ஒரே பேறான மகனை உங்களிடம் அனுப்பியது உங்களை தேவனின் மார்க்கத்தில் கொண்டு செல்லவேயாகும். நானே சத்தியமும் ஜீவனும் வழியுமாயிருக்கிறேன் எனக் கூறிய தேவன் இன்று மீண்டுமாக எழும்பச் செய்து நிலை நிறுத்துவார். **வெற்றிச் சிறந்த நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் யெகோவா-நிசி நீங்கள் என்னோடிருப்பதனால் என்னுடைய ஆத்மீக வாழ்வில் ஜெயம் பெறமுடியும். ஆனாலும் முன்னோக்கி பார்த்து தைரியமாக தொடர்ந்திட கிருபை செய்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். -ஆமென்-

வேத வாக்குத்தத்தம்

"நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்." .(வெளிப்படுத்தல் 3:21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஒக்டோபர்
03 சனி

## நமக்காக வேண்டுதல் செய்யும் தேவ ஆவியானவர்!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 85 – 86

**“அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார்.”**
(ரோமர் 8:26)

அருமையான தேவ ஜனங்களே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் நித்தியத்திலே நமக்கு தேவன் ஆயத்தப்படுத்தியிருக்கிறவைகளை ஆவிக்குரிய கண்களினால் கண்டு மகிழ்ச்சிகரமாக வாழ வாழ்த்துகின்றேன்.** உலகில் அனைத்து ஜாதிகளின் மத்தியில் தனது சொந்த ஜனங்களாக எங்களைத் தேர்ந்தெடுத்து எங்களை அதிகமாக நேசித்து எங்களைக் குறித்து **அதிகமாகக் கரிசனைக் கொண்ட தேவப் பிதா இன்றும் உங்களோடிருக்கிறார்.** அவர் ஒரு போதும் உங்களை கைவிடாத தேவன். **“ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல் தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை”** என **ஏசாயா 49:15**இல் எமக்கு வாக்களித்திருக்கும் வசனத்தைக் காண்கிறோம்.

தேவப் பிள்ளைகளே! நாம் தேவனின் சொந்தப் பிள்ளைகள் என்பதாலும் அவரது **பரிசுத்த ஆவியானவர்** எங்கள் உள்ளத்தில் வந்து எம்மை ஆளுகை செய்கின்றபடியினால் ஆகும். ஏனென்றால் தேவ ஆவியானவரைக் குறித்து நம் இயேசுகிறிஸ்து கூறுகின்றதாவது, அவர் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால் நீங்கள் அவரை அறிவீர்கள், **“நான் உங்களை திக்கற்றவர்களாக விடேன் உங்களிடத்தில் வருவேன்”** என்றே. பரலோகப் பிதா எங்கள் மேல் அதிக அக்கறை கொண்டுள்ளமையால் எங்களை பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும் மீட்டுக் கொள்ள ஒரே பேறான **தனது சொந்த குமாரனை மனுவுருவில் இவ்வுலகிற்கு அனுப்பினார். அவர் சிலுவையில் தம்மைத் தாமே பலியாக அர்ப்பணித்து மூன்றாம் நாள் மரணத்தை ஜெயித்தார். தனது சீஷர்களுக்கு வெளிப்பட்டு, பின்பு பரலோகம் சென்று தேவ ஆவியானவராக மீண்டுமாக எங்கள் உள்ளத்தில் வாசம் பண்ணுகின்றார்.**

தேவப் பிள்ளைகளே! தேவப்பிதா **ஒரு நாளும் எங்களை கைவிடாது எங்களோடு வாசம் பண்ணுகிறார் என்பது உறுதியாகின்றது.** இன்றைய தினத்தில் தேவன் கூறுவது **விஷேடமாக ஆவியானவர் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார் என்பதாக.** ஒரு தாய் தனது சிறு பிள்ளையின் தேவையை அறிந்து அவைகளை நிறைவேற்றுகிறாள். கல்வியில் பலவீனனாக இருந்தாலும் தன் முழு முயற்சியோடும் பிள்ளையை கல்வி கற்பிக்கின்றாள். ஒரு தாய் தன் பிள்ளையின் நிமித்தம் இவ்வளவாகக் **கரிசனைக் கொள்ளுவாள்** எனின், தேவப் பிதா **எங்களுக்காக ஆவியானவரிடம் மத்தியஸ்தம் பண்ணாமல் இருப்பாரா? மனமகிழ்ச்சியின் நாள்!**

ஜெபம்

என் தேவனே! எங்களோடு நித்தியமாய் இருக்கும்படியாக தேவ ஆவியானவரை எங்களுக்கனுப்பி எங்களுக்காக வேண்டுதல் செய்கின்றபடியால் ஸ்தோத்தரிக்கின்றேன். இயேசுவின் நாமத்தில்.
~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

“எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே;...” (1 தீமோத்தேயு 2:6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஒக்டோபர்
04 ஞாயிறு

## உங்களுக்கு மகா பெலனாயிருக்கும் தேவன்!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 87 – 88

**"...ஆபிராமே, நீ பயப்படாதே; நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன் என்றார்."** (ஆதியாகமம் 15:1)

என் அன்புக்குரியவர்களே! ஜீவிக்கின்ற **இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் உதயமாகிய இந்த நல்ல நாளுக்காக என் இனிய வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.** வானத்தையும், பூமியையும் படைத்த **சர்வ வல்லமை பொருந்திய தேவன்** உங்கள் தேவன் என்பதால் தேவன் இன்றும் ஜீவிக்கின்றவராகவே இருக்கின்றார். "**கர்த்தரை என்றென்றைக்கும் நம்புங்கள். கர்த்தராகிய யெகோவா நித்திய கன்மலையாயிருக்கிறார்.**" **என்று ஏசாயா 26:4**இல் பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளது.

தேவப் பிள்ளைகளே! மேலே பிரதான தேவ வசனத்தில் எழுதப்பட்டுள்ளதாவது, தேவனின் வார்த்தையானது ஆபிரகாமுக்குத் தரிசனத்திலே உண்டாகி "**ஆபிரகாமே நீ பயப்படாதே நான் உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன்**" என்றாகும். அதன் பிரதிபலனாக ஆபிரகாம் என பெயர் மாற்றப்பட்டது. **ஆபிரகாம் 99 வயதையடைந்த வேளையில்** கர்த்தர் தரிசனமாகி "நான் உன்னோடே பண்ணுகின்ற என் உடன்படிக்கை என்னவென்றால் "**நீ திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாவாய், இனி உன் பேர் ஆபிராம் என்னப்படாமல் நான் உன்னைத் திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாக ஏற்படுத்தினபடியால் உன் பேர் ஆபிரகாம் என்னப்படும்**" என்று **ஆதியாகமம் 17**ம் அதிகாரத்தில் கூறுகின்றார். ஆபிரகாமின் தேவன் இன்று உங்கள் தேவனாக இருக்கின்றார். **ஆபிரகாம் தேவன் பேரிலும் தேவ வசனத்தின் பேரிலும் அதிகமாக விசுவாசங் கொண்டிருந்தார். அவரது அந்த விசுவாசமே அவருக்கு பேராசீர்வாதமானது.**

தேவப் பிள்ளைகளே! தேவனது வசனம் ஆபிரகாமின் வாழ்வில் நிறைவேறியதுடன் **அவரது 100 வயதில் ஈசாக்கை அவரது சொந்த மகனாக கிடைக்கப் பெற்றார்.** நீ அநேக, திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாவாய் என ஆபிரகாமை ஆசீர்வதித்த **தேவன் ஆபிரகாமுக்கு மனைவி சாராவின் மூலமாக ஈசாக்கை பெற்றெடுக்கச் செய்து இஸ்ரவேல் வம்சம் உலகம் முழுவதும் பெருகச் செய்தார்.** நீங்களும் ஆபிரகாமின் தேவன் பேரில் விசுவாசங் கொண்டுள்ளபடியால் உங்களுக்குக் கிடைக்கும் பிரதிபலனோ **மிகப் பெரியதாகும். தேவன் பேரில் முழு விசுவாசத்தோடு பயணியுங்கள். ஆசீர்வாதமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் என்னை ஆசீர்வதிக்கின்ற தேவப் பிதா ஆவீர்கள். உங்களையும் உங்கள் வசனங்களையும் விசுவாசிப்போரை நீங்கள் ஒரு போதும் சிறுமையாக எண்ணமாட்டீர்கள். உங்கள் பெரிய ஆசீர்வாதம் என்னோடிருப்பதாக! இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சொன்னபடி உன்னை ஆசீர்வதிப்பதினால், நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன் கொடுப்பாய், நீயோ கடன் வாங்குவதில்லை; நீ அநேகம் ஜாதிகளை ஆளுவாய், உன்னையோ அவர்கள் ஆளுவதில்லை.
(உபாகமம் 15:6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஒக்டோபர்
05 திங்கள்

# உங்கள் கேடகமான தேவன்!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 89 – 90

**"...ஆபிராமே, நீ பயப்படாதே; நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன் என்றார்."** (ஆதியாகமம் 15:1)

அருமையான தேவ ஜனங்களே! தேவனால் வேறுபிரிக்கப்பட்ட நீங்கள் நித்திய **ஜீவனைப் பெற்றுக் கொள்ளும்படியாக தேவனையே பற்றிப் பிடித்து பயணிக்க வாழ்த்துகின்றேன்.** நேற்றைய தினத்தில் நீங்கள் வாசித்தது பரலோக தேவன் **உங்கள் மகா பெரிய பலனுமாயிருக்கும் தேவன் என்றே.** இன்றைய தினத்தில் அந்த தேவ வசனத்திற்கூடாக உங்களுக்கு தேவன் கூறுவது பரலோக தேவன் உங்களுக்கு **கேடகமாயிருக்கிறார்** என்றாகும். ஆகையால் **உள்ளங் கலங்காதிருங்கள்!**

தேவப் பிள்ளைகளே! கேடகம் என்றால் என்னவென்று நீங்கள் அறிவீர்களா? **விஷேடமாக** யுத்தத்திற்கு புறப்படுகையில் **இராணுவ வீரர்கள் அவர்களது உயிர்ப் பாதுகாப்பின் பொருட்டு பாவிக்கும் யுத்த ஆயுதமாகும்.** அதில் நடைபெறுவதென்னவென்றால் யுத்த சேனை அணிவகுப்பில் முன்னாலிருந்து யுத்தம் செய்யும் போது எதிராளிகள் மூலம் எய்யப்படுகின்ற ஆயுதங்களினால் வரும் **ஆபத்துக்களில் போர்ச் சேவகனுக்கு பாதிப்பு வராமல் பாதுகாப்பதாகும்.** இதை எமது ஆவிக்குரிய ஜீவியத்தோடு ஒப்பிட்டு பார்க்குமிடத்து **எங்கள் வாழ்க்கையில் பலவித பிரச்சினைகள், போராட்டங்கள், சவால்கள்** என்பவற்றிற்கு முகம் கொடுக்கின்றோம் அல்லவா? அவைகள் எமது வாழ்க்கையில் உருவாகும் **ஆத்மீக யுத்தங்களாகும்.**

தேவப் பிள்ளைகளே! **நீங்கள் அதைரியபடாதிருங்கள்!** ஆபிரகாமுக்கு கர்த்தருடைய வார்த்தை தரிசனத்தில் உண்டாகி **"ஆபிராமே நீ பயப்படாதே நான் உனக்குக் கேடகமும் உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன்"** என்று கூறிய தேவன் இன்றும் ஜீவிக்கின்றவராயிருக்கிறார். நீங்கள் அவரை விசுவாசித்து அவரது **சொந்தப் பிள்ளைகளாக இருங்கள். ஆகையால் ஆபிரகாமுடன் வாழ்வில் இணைந்திருந்த தேவன் உங்களுக்கும் அவ்வண்ணமாகவே இருக்கின்றார்.** உங்கள் ஆத்மீக வாழ்க்கைக்கு விரோதமாக செயல்படுகின்ற **உங்கள் எதிராளியான சாத்தான் உங்களுக்கெதிராக செய்யும் அனைத்து செயல்களிலும் மரணக்கண்ணிகள் என்பவற்றில் உங்களுக்கு வெற்றியைப் பெற்றுக் கொள்ள உங்கள் கேடகமாக உங்களைப் பாதுகாத்துக் கொண்டிருக்கும் தேவனுக்குள் நிலைத்திருங்கள்.** சத்துருவானவனின் நெருக்கங்களில் உங்கள் வாழ்வு அழிந்து அல்லது சீர்க்குலைந்து போகாத வண்ணம் கர்த்தர் **காத்துக் கொள்வார்.** நீங்கள் பயமில்லாது ஆத்மீக வாழ்வில் முன்னோக்கிப் பயணியுங்கள். உங்கள் தேவன் **இன்றும் உங்களோடிருந்து உங்களுக்கு பாதை காட்டுவார். ஜெயத்தின் நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் எனது கேடகமாக இருக்கின்றீர்கள். யுத்த வீரர்கள் யுத்தத்தில் அவர்களது உயிரைக் காப்பாற்றும்படியாக அணிந்துக் கொள்வார்கள். எனது ஆத்மீக யுத்தத்தில் நீங்கள் கேடகமாக என்னை மீட்டுக் கொள்ளுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"துன்மார்க்கனுக்கு அநேக வேதனைகளுண்டு; கர்த்தரை நம்பியிருக்கிறவனையோ கிருபை சூழ்ந்துகொள்ளும்."
(சங்கீதம் 32:10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஒக்டோபர்
06 செவ்வாய்

# தனது உடன்படிக்கையின் வசனங்களை நிறைவேற்றும் தேவன்!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 91 – 92

**"நீங்கள் எகிப்திலிருந்து புறப்படுகிறபோது நான் உங்களோடே உடன்படிக்கைபண்ணின வார்த்தையின்படியே, என் ஆவியானவரும் உங்கள் நடுவில் நிலைகொண்டிருப்பார்; பயப்படாதேயுங்கள்."**
(ஆகாய் 2:5)

அருமையான தேவப் பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உதயமான இந்நந்நாளிலே தேவன் இஸ்ரவேல் ஜனங்களோடு உடன்படிக்கையின் வார்த்தையின்படியே நீங்களும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கின்றீர்கள். ஆகையால் **இன்றைய நாளிலும் உங்களுக்கு ஆசீர்வாதம் குறைவில்லாமல் கிடைக்கும்படியாக வாழ்த்துகின்றேன்.** இன்னுமாக பரலோகப் பிதாவானவரின் தேவ வசனங்கள் ஒரு போதும் மாறாதபடியால் **நீங்கள் கலங்காதிருங்கள்!** உங்களோடு இருக்கின்றவர் இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர்.

தேவப் பிள்ளைகளே! மேலே கூறப்பட்ட **ஆகாய் 2:5**இல் தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு கூறுவதாவது நீங்கள் எகிப்திலிருந்து புறப்படுகிற போது நான் உங்களோடே உடன்படிக்கை பண்ணின வார்த்தையின்படியே என் **ஆவியானவரும் உங்கள் நடுவில் நிலை கொண்டிருப்பார் என்றாகும்.** தேவன் ஆபிரகாமோடு உடன்படிக்கை பண்ணி அவர்களது வம்சம் 400 வருடங்கள் அத் தேசத்தில் அடிமைகளாக இருக்கின்றமையாலும், அவர்கள் இஸ்ரவேல் வம்சத்தை வன் முறைகளினால் உபத்திரவப் படுத்துகின்றமையாலும் **400 வருட முடிவில் அந்நாட்டை நியாயந் தீர்ப்புச் செய்து ஆபிரகாமின் வம்சம் பெரும்பாலான உடமைகளோடு அத்தேசத்தினின்று கொண்டு வரப் போவதாகவும் - தேவன் வாக்களித்தார்.** அதன் பின்னர் தேவன் வாக்களித்தபடி இஸ்ரவேல் வம்சத்தில் **மோசே எனும் வாலிபனை தேர்ந்தெடுத்து இஸ்ரவேல் ஜனங்களுக்குத் தலைவனாக நியமித்து அவர்களை எகிப்து தேசத்திலிருந்து வெளியே கொண்டு வந்தார்.**

தேவப் பிள்ளைகளே! தேவன் மோசேயை **சீனாய் மலை உச்சிக்கு அழைத்து அவருக்கு நியாயப்பிரமாணத்தைக் கொடுத்து அதைக் கடைப்பிடிக்கும்படியாக ஜனங்களை ஆயத்தம் பண்ணும்படி கூறி அவர்களோடு உடன்படிக்கை பண்ணினார்.** தேவ ஆவியானவர் கூறியதன்படி தேர்ந்தெடுத்த தேவ மனுஷரைக் கொண்டு ஜனங்களுக்கு வழிகாட்டி **அவர்களை முன்னோக்கி பயணிக்கும்படியாகச் செய்தார். தேவன் மாறாதவராக இருக்கின்றார்.** இன்றும் ஒரே பேறான குமாரன் இயேசுகிறிஸ்துவுக்கூடாக எங்களை அழைத்து தேவன் பரிசுத்த ஆவியானவரைத் தந்தருளியிருக்கிறார். ஆகையால் பரிசுத்த வேதாகமத்தில் இருக்கின்ற அனைத்து பொருத்தனைகளையும் இன்றும் **உங்கள் வாழ்க்கையில் நடப்பிக்க வல்லமையுடையவராயிருக்கின்றார். இன்று வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் நித்திய தேவன் என்பதால் உங்கள் வசனங்கள் சதாகாலமும் நிலை நிற்கும். உங்கள் உடன்படிக்கையின் வசனமாக என்னை ஆசீர்வதியுங்கள். இயேசுவின் நாமத்தில்.
~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"ஆகையால் முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்திசெய்யும்பொருட்டு அவர் மரணமடைந்து, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்துகொள்வதற்காக, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்." (எபிரேயர் 9:15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஒக்டோபர்
07 புதன்

# உங்களுக்காக யுத்தம் பண்ணுகின்ற தேவன்!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 93 – 94

"கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள் என்றான்." (யாத்திராகமம் 14:14)

அன்பு நிறை பிள்ளைகளே! எங்களுக்காக மத்தியஸ்தம் பண்ணி எங்களுக்கு நேரிடும் உபத்திரவங்களின் போது, துணையாக நின்று கண்ணின் மணியாக பாதுகாக்கும் அன்பான **இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில், இன்றும் உங்களுக்கு நன்மைகள் வாய்க்கப் பெறும் நாளாகும்படியாக வாழ்த்துகின்றேன்.** தேவப் பிள்ளைகளே! பரிசுத்த வேதாகமத்தின்படி **இந்த ஆவிக்குரிய ஜீவியமானது மல்யுத்தத்தைப் போன்றும் யுத்த பூமியென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. எங்களைத் தெரிந்தெடுத்த தேவன் எங்களுக்காக யுத்தம் செய்கின்றார். நாம் அமைதியாக இருக்க வேண்டும்** என்பதே **யாத்திரகாமம் 14:14**இல் கூறப்பட்டுள்ளது. **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!** ஏனென்றால் தேவனின் வசனமானது ஒரு போதும் வெறுமையாக திரும்பி வராது.

தேவப் பிள்ளைகளே! நீங்கள் தெரிந்துக் கொள்ள வேண்டிய காரியம் **உங்கள் சவால்களின் போது ஆத்மீக போராட்டங்களின் போது நீங்கள் அமைதியாக இருக்க வேண்டுமென்பதையே,** என **வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.** ஆகையால் இன்றைய நாளிலும் நீங்கள் முகங் கொடுக்க வேண்டிய காரியங்களின் போது உங்கள் மனதை குழப்பத்திற்குள்ளாக்காமலும், **நீங்கள் யுத்தக் களத்திற்கு இறங்கி பிரச்சினைகளுக்கு பதில் தேடும்படியாக யுத்தம் செய்ய வேண்டாமெனவும் உங்களிடம் கேட்கிறேன்.** ஏனென்றால் எங்களுக்காக யுத்தம் பண்ணும் தேவன் தனது பங்கை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் போது நீங்கள் வேறு பக்கத்தில் இன்னுமொரு யுத்தம் பண்ணுவீர்களெனின் தேவன் மூலம் உங்களுக்குக் கிடைக்கின்ற **வெற்றியைப் பெற இன்னும் தாமதமாகலாம். ஆனாலும் அமைதியாக இருந்து மிக ஞானத்துடன் நீங்கள் செய்ய வேண்டிய பங்கை மாத்திரம் நிறைவேற்றி தேவனிடம் கையளித்து விடுங்கள்.**

தேவப் பிள்ளைகளே! தேவன் **உங்களை நேசிக்கின்றபடியால் உங்களை** ஒரு **போதும் மறப்பதே இல்லை. எந்த விதமான இடையூறுகள், இன்னல்களின் போதும் மாற்று வழிகளை அமைத்துக் கொடுக்க அதிதீவிரமாய் செயல்படும் தேவனாய் இருக்கிறார்.** அது உங்கள் பொருளாதார பிரச்சினையாயினும் ஆத்மீக பிரச்சினையாயினும் உடன் பதில் பெற்றுத்தர வல்லமையாக கிரியை செய்யும் நம் தேவன் அவரே! அனைத்தையும் விசுவாசத்தோடு **தேவ பாதத்தில் வைத்து அவரை நோக்கிய வண்ணமாயிருங்கள். தேவனின் அனைத்து கிரியைகளும் மிக அழகு நிறைந்ததாக இருக்கின்றன. மகிமையுள்ளதாக காணப்படுகின்றன. வெற்றிகரமான நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! நீங்கள் எனது ஆத்மீக யுத்தக் களத்தில் எனக்காக யுத்தம் செய்கின்றபடியால் ஸ்தோத்திரம். தேவனே நான் இன்று முதல் அமைதியாக உங்களை நோக்கிக் கொண்டிருப்பேன். என் நிமித்தமாக யுத்தம் செய்வீர்களாக. இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"யாக்கோபின் தேவனைத் தன் துணையாகக் கொண்டிருந்து, தன் தேவனாகிய கர்த்தர்மேல் நம்பிக்கையை வைக்கிறவன் பாக்கியவான்."
(சங்கீதம் 146:5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஒக்டோபர்
08 வியாழன்

## எதிராக வருபவர்களை சொப்பனத்தில் பேசி மனமாற்றத்தை உருவாக்கும் கர்த்தர்!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 95 – 96

**"உங்களுக்குப் பொல்லாப்புச்செய்ய எனக்கு வல்லமை உண்டு; ஆகிலும், உங்கள் தகப்பனுடைய தேவன்: நீ யாக்கோபோடே நன்மையே அன்றித் தீமை ஒன்றும் பேசாதபடிக்கு எச்சரிக்கையாயிரு என்று நேற்று ராத்திரி என்னோடே சொன்னார்."** (ஆதியாகமம் 31:29)

அருமை மிகு தேவப் பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் தேவனால் வழி நடத்தப்படும். நீங்கள் உதயமாகும் ஒவ்வொரு நாளிலும் மகிழ்ந்திருக்கும்படியாக வாழ்த்துகின்றேன்.** தனது சொந்த பிள்ளைகளுக்கு எல்லா வேளைகளிலும் **நன்மைகளை மாத்திரமே செய்ய வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருக்கும் தேவன் இன்றும் உங்களுக்கு நன்மைகளையே வாய்க்கப் பண்ணுவார். எனவே கலங்காதிருங்கள்!**

தேவப் பிள்ளைகளே! ஈசாக்கின் புத்திரனான யாக்கோபு தனது **தாயின் சகோதரனை ஆரான் எனும் ஊர் மனிதர்களிடம் விசாரித்து** லாபானிடம் வந்து **அவனுடைய வீட்டில் இருபது வருடங்கள் வாழ்ந்தான். பதினாலு வருடங்கள் லாபானின் குமாரத்திகளுக்காகவும், ஆறு வருடங்கள் லாபானின் மந்தைகளுக்காகவும் கழிந்தது.** இறுதியாக தனது தகப்பனிடம் செல்ல பிரியப்பட்டு கூறாமல் தனது மனைவிமார் இரண்டு பேரையும் தனக்குச் சொந்தமான அனைத்தையும் எடுத்துக் கொண்ட **யாக்கோபு லாபானிடமிருந்து பிரிந்து வந்தான்.** ஏனெனில் லாபானுக்கு அறிவித்தால் அவன் போக அனுமதியளிக்க மாட்டான் என நினைத்தான். தேவன் **"இப்பொழுது நீ எழுந்து இந்தத் தேசத்தை விட்டுப் புறப்பட்டு உன் இனத்தாரிருக்கிற தேசத்திற்குத் திரும்பிப் போ"** என்று கூறினார். இவ்வாறாக தேவன் யாக்கோபிற்கு கூறியபடியால் அவன் லாபானிடமிருந்து பிரிந்துச் சென்றான்.

தேவப் பிள்ளைகளே! யாக்கோபு தன்னிடமிருந்து ஓடிப் போய் விட்டான் என்பதை லாபான் தெரிந்துக் கொண்டது அவன் சென்று மூன்று நாட்களிலேயாகும். அப்பொழுது அவன் தனது சகோதரனையும் அழைத்துக் கொண்டு **"ஏழு நாட்கள் பிரயாணம் பண்ணி அவனைத் தொடர்ந்து போய் கீலேயாத் மலையில் அவனைக் கண்டு பிடித்தான். அன்று ராத்திரி தேவன் சொப்பனத்தில் தோன்றி நீ யாக்கோபோடே நன்மையையேயன்றித் தீமை ஒன்றும் பேசாதபடிக்கு எச்சரிக்கையாயிரு"** என்றார். தேவப் பிள்ளைகளே! நீங்கள் தேவனுக்குள் உண்மையாக ஜீவிப்பீர்களாயின் **தேவன் எப்போதும் உங்கள் பட்சமாயிருப்பார்.** உங்களுக்கு தீமை யாதொன்றும் நேரிடா வண்ணமாக எதிராக வருபவர்களை கட்டிப் போடுவார். லாபான் பயங்கரமாக கோபத்தோடு யாக்கோபிடம் வந்த போதும் **தேவன் இடைப்பட்டு அனைத்தையும் நிர்மூலப்படுத்தினார். நீங்களும் பயப்படாதீர்கள். தேவன் உங்களதும் தேவனல்லவா? வெற்றிச் சிறந்த நாள்!**

ஜெபம்

என் இயேசுவே! உங்கள் முன்னிலையில் உண்மையாக நடப்போர்க்கு உங்கள் இரக்கம் முடிவில்லாததாக இருக்கின்றது. எதிரிகளுக்கு விரோதமாயினின்று அவர்களை கட்டிப் போடுகின்றார். பிதாவே நீங்கள் என் பட்சமாயிருங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"இதோ, நான் என் கையை அவர்களுக்கு விரோதமாக அசைப்பேன்;...". (சகரியா 2:9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஒக்டோபர்
09 வெள்ளி

# உங்கள் கசப்பான வாழ்வை மதுரமாக மாற்றும் தேவன்!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 97 – 98

**"மோசே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான்: அப்பொழுது கர்த்தர் மோசேக்கு ஒரு மரத்தைக் காண்பித்தார்: அதை அவன் தண்ணீரில் போட்டவுடனே, அது மதுரமான தண்ணீராயிற்று..."**
(யாத்திராகமம் 15:25)

அன்பு மிகு தேவ ஜனங்களே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றைய நாளிலும் உங்கள் வாழ்வில் சுகம், சந்தோஷம், சமாதானம் நிறைந்திருக்கும்படியாக வாழ்த்துகின்றேன்.** உலகில் சில பிள்ளைகள் மிகவும் சந்தோஷத்துடன் நல்வாழ்வைப் பெற்று வாழ்வதோடு, **சிலர் மிகவும் துக்கத்தோடும் வேதனையோடும், கண்ணீரோடும் அவர்கள் வாழ்க்கையை கழிக்கின்றார்கள்.** அவர்கள் கூறுவதாவது "ஐயோ" எனக்கென்றால் இப்போது வாழ்க்கை வேண்டாமென்றாகி, வெறுப்போடும், கசப்போடும் இருக்கின்றேன் என்றாகும். **நீங்களும் அப்படியானதொரு வாழ்க்கை வாழும் ஒருவரா? என்றாலும் உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!**

தேவப் பிள்ளைகளே! **யாத்திராகமம் 15:25**இல் கூறப்படுகின்றதாவது, **மாராவின் கசப்பான தண்ணீரை தேவன் மதுரமாக மாற்றியதைக் குறித்தாகும்.** ஏனென்றால் மோசே இஸ்ரவேல் ஜனங்களோடு செங்கடலின் நடுவில் நடந்து **சூர் எனும் வனாந்தரத்திற்குப் புறப்பட்டுப் போய் மூன்று நாள் வனாந்தரத்தில் தண்ணீர்க் கிடைக்காமல் நடந்தார்கள்.** இப்படியாக மூன்று நாள் வனாந்தரத்தில் பிரயாணம் செய்து தாகத்தோடு மாராவிற்கு வந்தார்கள். அங்கே **தண்ணீர் கசப்பாக இருந்தமையினால் ஜனங்களுக்கு குடிக்க முடியாமற் போனது.** அப்பொழுது இஸ்ரவேல் ஜனங்கள் அவர்களை எகிப்திலிருந்து வெளியில் கொண்டு வந்த அவர்களது **தலைவனான மோசேக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள். மோசேயும் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான்.** அப்பொழுது கர்த்தர் மோசேக்கு ஒரு மரத்தைக் காண்பித்தார். **அவன் அதை தண்ணீரில் போட்டவுடனே அது மதுரமான தண்ணீராயிற்று. அதன் பிறகு இஸ்ரவேல் ஜனங்கள் தண்ணீரைக் குடித்து தாகத்தை தீர்த்துக் கொண்டார்கள்.**

தேவப் பிள்ளைகளே! அன்று **தேவன் மோசேயின் வேண்டுதலை ஏற்று மாராவின் கசப்பு நீரை மதுரமாக மாற்றினார்.** உங்கள் வாழ்வும் இன்றைய நாளில் மாராவின் தண்ணீரைப் போன்று கசப்பாக, விரக்தியாக இருக்கின்றதா? ஆனாலும் **பயப்படாதீர்கள்! இஸ்ரவேலின் தேவன் உங்களோடிருப்பதனால் கசப்பான, விரக்தியான உங்கள் வாழ்வை இனிய, மதுரமான வாழ்வாக மாற்றுவார்.** கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஒரு சகோதரி இவ்வாறாக சாட்சி சில நாட்களுக்கு முன்னர் ஒரு சகோதரி இவ்வாறாக சாட்சி கொடுத்தார். **16 வருட காலமாக விரக்தியான, க்சப்பான முட்களின் நடுவே வாழ்ந்துக் கொண்டிருந்த அவர் இயேசுவண்டை வந்து சில கிழமைகளிலேயே அவளது கணவன் முழுமையாக உள்ளந்திருந்தினார்.** அத்தோடு என் வாழ்வில் பெரிய மாற்றம் ஏற்பட்டு வாழ்வு மதுரமாக மாறியது என்றாகும். **நீங்களும் மதுரமான வாழ்வை பெற்றுக் கொள்ளலாம். வெற்றிச் சிறந்த நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் மாராவின் தண்ணீரை மாற்றிய தேவனாவீர்கள். இன்றும் மாறாத தேவனாக இருக்கின்றதை நானறிவேன். எனது கசப்பான வாழ்வை இன்று மதுரமாக மாற்றுங்கள். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை,..." (வெளி. 21:4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஒக்டோபர்
10 சனி

## உங்கள் வழிகள் கர்த்தரின் கண்களுக்கு முன்பாக இருக்கின்றது!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 99 – 100

**"அவர் என் வழிகளைப் பார்த்து, என் நடைகளையெல்லாம் எண்ணுகிறார் அல்லவோ?"** (யோபு 31:4)

அன்பார்ந்த தேவப் பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றும் உங்களுக்கு நல்ல நாளாகும்படியாகவும் தேவனின் அநுக்கிரகத்தின் நாளாகும்படியாகவும் வாழ்த்துகிறேன்.** உலகில் தெய்வம் என்றொருவர் ஜீவிக்கினற்வராக இருக்கின்றார் என்றும், **அவரே உண்மையான தெய்வம் என்றும் அவரே நமக்கு ஆச்சரியமான தேவன் என்றும் தேவன் மனிதர்களுக்கு துணைபுரியும் தேவன் என்றும் முழு உள்ளத்தோடு விசுவாசிப்போர் மிகவும் குறைந்தவர்களாகவே காணப்படுகிறார்கள்.** ஆனாலும் உலகில் மற்றவைகளுக்கு மனிதர்கள் முதலிடம் கொடுக்கிறார்கள்.

தேவப் பிள்ளைகளே! **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக! சுமார் 31 வருட ஆத்மிக வாழ்வில் என்னை முன்னோக்கி கொண்டு வந்தது எனது பரலோக பிதாவானவரே!** அவர் என்னோடே இருந்து என்னைப் பாதுகாத்து இவ்வண்ணமாகக் கொண்டு வந்தாரென்பதை நான் அறிவேன். மேலே கூறப்பட்ட **யோபு 31:4**இல் பிரதான தேவ வசனத்தில் எழுதியிருப்பதாவது **"அவர் என் வழிகளைப் பார்த்து என் நடைகளையெல்லாம் எண்ணுகிறார் அல்லவோ"** என்றாகும். அதன் விளக்கம் என்னவென்றால் தேவன் நமது அனைத்து காரியங்களையும், கிரியைகளையும் அறிபவர் என்றே. **எனது ஆத்மீக பயணத்திலும் உலகத்திற்கூடாக எனக்கு வந்த பிரச்சினைகள், உபத்திரவங்கள், சவால்களின் போது தேவன் என்னோடிருந்து அவைகளுக்கு முகம் கொடுக்க எனக்கு பெலனைத் தந்தார்.** மனிதர்களுக்கு உதவி செய்து நிந்தை அவமானம், வெட்கம் ஏற்பட்ட வேளை தேவன் என்னோடிருந்து என்னை ஆற்றித் தேற்றி முன்னோக்கி கொண்டு வந்தார்.

தேவப் பிள்ளைகளே! **தேவனுக்காக, இராஜ்யத்திற்காக எவ்வளவாக வாஞ்சையுடன் செய்கின்றேனென்பதை தேவன் அறிவார். ஏனென்றால் தேவன் எனது எல்லா வழிகளையும் நோக்கிய வண்ணமாக இருக்கின்றார்.** எனக்கு மாத்திரமல்ல உங்களுக்கும் அவ்வண்ணமே. உங்கள் வாழ்க்கையின் வழிகளை அறிந்தவராக இருக்கிறார். நீங்கள் செய்கின்ற அனைத்து கிரியைகளையும் நல்ல எண்ணங்களுடன் செயல்படுத்துகின்றீர்களா? எனத் தேடிய வண்ணமாக இருக்கின்றார். உங்கள் வழிகள் நன்மையாக காணப்படின் **தேவன் எல்லா வழிகளிலும் அவரது அநுக்கிரகத்தையும், இரக்கத்தையும் குறையாமல் பெற்றுத் தருவார். தினம், தினம் உங்கள் வாழ்வை ஆசீர்வதித்து உங்களை உயர்த்திடுவார். ஜெயத்தின் நாள்!**

**ஜெபம்**

என் நல்ல மேய்ப்பரே! பரலோகத்திலிருந்து நீங்கள் என்னைப் பார்க்கும் தேவனாகையால் உங்களுக்கு நன்றி! தேவனே நீங்கள் என் வழியை நோக்கி என்னை ஆசீர்வதியுங்கள். இயேசுவின் நாமத்தில்.

~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"மனுஷருடைய வழிகள் கர்த்தரின் கண்களுக்கு முன்பாக இருக்கிறது; அவனுடைய வழிகளெல்லாவற்றையும் அவர் சீர்தூக்கிப்பார்க்கிறார்."
(நீதிமொழிகள் 5:21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஒக்டோபர்
11 ஞாயிறு

தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களின் ஜெபத்திற்கு பதில் கொடுக்கும் தேவன்!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 101 – 102

"எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று; ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்." (1 பேதுரு 4:17)

அருமையான தேவ ஜனங்களே! கர்த்தர் உங்களுக்கு ஆயத்தப்படுத்தினவைகளை **உங்களுடைய விசுவாசக் கண்களால் கண்டு மகிழும்படியால் இன்றைய நாளில் காலைப் பொழுதில் வாழ்த்துகின்றேன். இன்றைய நாளில் தேவ செய்தியை வாசிக்கும் நீங்கள் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.** ஏனென்றால் உலகில் வாழ்கின்ற ஒவ்வொரு மனிதனும் வெளிசுவாசம், உட்சுவாசம் என்ற இரண்டு முறையாக சுவாசிக்காமல் இருக்க இயலாது. ஏனென்றால் **மனிதனுக்கு சுவாசிக்காமலிருக்க முடியாது.** அப்படியே தேவனின் பிள்ளைகளான நாம் தேவனை நோக்கி ஜெபித்தால் நாம் சுவவாசிப்பதற்கு சமனாகும்.

தேவப் பிள்ளைகளே! மேலே கூறப்பட்ட **1 பேதுரு 4:17**இல் தேவ வசனத்தில் பேதுரு தேவ ஆவியானவரைக் குறித்து எமக்கு கூறுவதாவது "**எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து ஜெபம் பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்.**" என்று கூறப்பட்டுள்ளது. அதன் கருத்து என்னவென்றால் **நாம் அனைத்திலும் ஜெபத்திற்கே முதலிடம் கொடுக்க வேண்டுமென்பதே ஜெபம் என்றால் தேவனோடு உரையாடுதலாகும்.** இந்த தேவ செய்தியை வாசிக்கும் நீங்கள் உங்கள் தேவனை நோக்கி ஜெபிக்கும் ஒருவரா? எங்கள் இரட்சகராகிய இயேசுகிறிஸ்து எங்களுக்கு கூறியிருப்பது **பரி.யோவான் 15:16**இல் "**நீங்கள் என்னைத் தெரிந்துக் கொள்ளவில்லை நான் உங்களைத் தெரிந்துக் கொண்டேன்.. நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக் கொள்வது எதுவோ அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனி கொடுக்கும்படிக்கும் உங்கள் கனி நிலைத்திருக்கும்படி-க்கும் நான் உங்களை ஏற்படுத்தினேன்**" என்று எழுதப்பட்டுள்ளது.

தேவப் பிள்ளைகளே! ஆகையால் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கின்ற **நீங்கள் அவரின் நாமத்தில் பரலோகப் பிதாவானவரை நோக்கி ஜெபம் பண்ணுங்கள்.** நீங்கள் தினமும் இடைவிடாது ஜெபியுங்கள். நீங்கள் ஜெபிக்கத் தொடங்கும் வேளை முதலாவதாக **உங்களுக்கு தேவன் கொடுத்த ஆசீர்வாதங்களை எண்ணி ஸ்தோத்திரம் செய்யுங்கள்.** அது தேவனின் முன்னிலையில் பிரியமாயிருக்கும். இயேசுகிறிஸ்து உங்களுக்கு காட்டிய அன்பினை எண்ணி அவரது அன்பில் கிட்டிச் சேருங்கள். அப்பொழுது தேவன் இன்னும் அதிகமாக நெருங்கி **உங்கள் ஜெபங்களுக்கு பதில் தருவார். உங்கள் சோதனைகளில், உபத்திரவங்களில் உங்களுக்கு ஜெயத்தை தருவார். மனமகிழ்ச்சியின் நாள்!**

ஜெபம்

என் பிதாவாகிய தேவனே! இயேசுகிறிஸ்துவுக்கூடாக என்னை உங்கள் சொந்த மகனாக, மகளாக தெரிந்துக் கொண்டமையால் ஸ்தோத்திரம். ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ளம்படியாக ஜெபம் பண்ண உதவி செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அந்தப்படியே தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ்செய்யாமலிருப்பாரோ?" (பரி.லூக்கா 18:7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜீவ மன்னா**
**ஒக்டோபர்**
**12** திங்கள்

# கண்ணின் இமைகளின் கருமணியைக் காப்பது போல காக்கும் தேவன்!

**வேதவாசிப்பு**
சங்கீதம்
அதி: 103 – 104

**"கண்மணியைப்போல என்னைக் காத்தருளும்."** (சங்கீதம் 17:8)

அருமையான தேவப் பிள்ளைகளே! **இயேசுகிறிஸ்துவின் இணையற்ற நாமத்தினால் அவரின் சமுகத்தின் பரிபூரண ஆனந்தத்தையும், அவருடைய வலது பாரிசத்தின் நித்திய பேரின்பத்தையும் பெற்றுக் கொள்ளும்படியாக வாழ்த்துகின்றேன்.** மனித சரீரமானது தேவனின் **அற்புத படைப்பு என்பதோடு அவயங்களுமாயிருக்கின்றன. அதன் கிரியைகளும் மிகவும் புதுமையாக படைக்கப்பட்டிருக்கின்றன.** எங்கள் கண்களைக் குறித்து சற்று சிந்தித்துப் பார்ப்போம் எங்கள் கண்களின் பாதுகாப்பிற்காக **கண் இமைகள்** அமைக்கப்பட்டுள்ளன. அவ்வண்ணமாக எங்கள் பரலோக பிதாவானவர் எங்களைத் காத்துக் கொள்கிறார் என இன்று வேத வசனத்தில் கூறப்படுகின்றது.

தேவப் பிள்ளைகளே! **எங்கள் கண்களின் கருமணிக்கு ஏதாவதொரு ஆபத்து நேரிடப் போகின்றதெனின் உடனே எங்கள் கண்ணிமைகளினால் கண்களை மூடி அதை பாதுகாத்துக் கொள்கிறோம்.** அப்படியே கண்கள் இரண்டினதும் கரு மணிகளின் ஈரத்தன்மை தொடர்ந்திருக்கும்படியாக எல்லா வேளைகைளிலும் கண்ணின் இமைகள் மூடிக் கொள்கின்றன. மேற் கூறப்பட்ட **சங்கீதம் 17:9**இல் எழுதப்பட்டுள்ளதாவது **"கண்ணின் மணியைப் போல என்னைக் காத்தருளும்"** என்றே. இன்னுமாக **சகரியா 2:8**இல் **"உங்களைத் தொடுகிறவன் அவருடைய கண்ணின் மணியைத் தொடுகிறான்"** என்று கூறப்பட்டுள்ளது.

தேவப் பிள்ளைகளே! தேவனின் வசனமானது ஒரு போதும் பொய்யாக இருக்காது. **இன்றும் வார்த்தைகள் ஒவ்வொன்றும் ஜீவிக்கின்றதாகவும், உண்மையானதாகவும் இருக்கின்றது.** ஆகையால் அவரது வசனத்தை முழு மனதோடு விசுவாசிப்போரைக் குறித்து தேவன் அதிகமாக கரிசனைக் கொண்டுள்ளார். அப்படியே தேவ வசனங்களில் குறிப்பிட்டுள்ள பிரகாரம் **ஒவ்வொருவரின் வாழ்விலும் தேவன் செயல்படுகிறார். சில பெற்றோர்கள் பிள்ளைகளை மிக அன்போடு பராமரிக்கின்றார்கள்.** பிள்ளைகள் அவர்களின் இரண்டு கண்களைப் போல் என்று கூறுவார்கள். சில பெற்றோர்கள் பிள்ளைகளை அவ்வண்ணமாக அன்பு கொள்வதில்லை என்பதை அறிவோம். ஆனாலும் **பரலோகத்தில் வாசம் பண்ணும் பரலோக தேவன் எங்கள் மாம்ச தாய், தகப்பன் இவர்களைப் பார்க்கிலும் எங்களை மிகவும் நேசிக்கின்றார்.** தேவன் தன் பிள்ளைகளை வித்தியாசமின்றி ஒரே மாதிரியாகவே நேசிக்கின்றார். அப்படியானால் **இரு கண்களைப் போன்று காதுகாக்கின்றார் என விசுவாசியுங்கள் வெற்றிச் சிறக்கும் நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! உங்கள் கண்களின் கரு மணிகளைப் போல நீங்கள் எங்களை பாதுகாக்கும் தேவன் ஸ்தோத்திரம்! தேவனே இன்றும் என் வாழ்விற்கு சாத்தான் அநேக தடைகளை ஏற்படுத்துகின்றான். ஆனாவும் நீங்கள் என்னைப் பாதுகாத்து கொள்ளுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்; அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய்;..."
(சங்கீதம் 91:4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஒக்டோபர்
13 செவ்வாய்

## மனந்திரும்பிய உங்களின் விண்ணப்பங்களைக் கேட்டு குணமாக்கும் தேவன்!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 105 – 106

"...அவர்கள் கர்த்தரிடத்தில் மனந்திரும்புவார்கள்; அப்பொழுது அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்டு, அவர்களைக் குணமாக்குவார்." (ஏசாயா 19:22)

அன்புக்குரியவர்களே! **இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் இயேசுவின் சுகம், சந்தோஷம், சமாதானத்துடன் வாழும் நீங்கள் அவரையே சார்ந்து கொள்ளும்படியாக இன்றைய நாளில் வாழ்த்துகின்றேன்.** பலவிதமான மனிதர்கள் **சிறுமைப்பட்டு வாழ்பவர்களாக இருக்கின்றார்கள்.** ஏனெனில் உலகில் மனிதர்களுக்கு சொந்த அம்மா, அப்பா இவர்களைத் தவிர யாரும் நெருங்கி ஜீவிப்பதில்லை.

தேவப் பிள்ளைகளே! தனது அம்மாவிடமும், அப்பாவிடமும் பெறுகின்ற அன்புக்கு ஈடாக உலகில் எவரின் அன்பும் கிடைப்பதில்லையென்பதை நாமறிவோம். ஏனெனில் தனது பிள்ளைகள் எவ்வண்ணமாக இருப்பினும் **அவர்கள் பிள்ளைகளின் பேரில் காட்டுகின்ற அன்பு ஒரு போதும் குறைவதில்லை. ஆனாலும் இப்படி அன்பற்ற பெற்றோர்கள் உலகில் இல்லாமல் இல்லை. அப்படியான காரியங்களை உலகில் கேள்விப் பட்டிருக்கின்றோம். எப்படியாயினும் பெற்றோர்கள் இன்றி உலகில் ஆதரவற்ற மனிதர்கள் அநேகமாக அழுது புலம்புவதோடு தனிமையாக துயரத்தோடும் வாழ்கின்றார்கள்.** ஆனாலும் இன்று இந்த தேவ செய்தியை வாசிக்கும் நீங்கள் யாராக இருப்பினும் இப்படி இருந்தால் பயப்படாதீர்கள்! கலங்காதீர்கள்!

தேவப் பிள்ளைகளே! மேலே கூறப்பட்ட **ஏசாயா 19:22**இல் கூறப்படுகிறதாவது **"அவர்கள் கர்த்தரிடத்தில் மனந்திரும்புவார்கள், அப்பொழுது அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்டு அவர்களைக் குணமாக்குவார்"** என்றாகும். உலகில் யார் உங்களைக் கைவிட்டாலும் உங்களைத் தனிமைப்படுத்தினாலும் **நீங்கள் கவலைப்படாதீர்கள்!** தாயின் கர்ப்பத்திலேயே உங்களைத் தேர்ந்தெடுத்த உங்கள் தேவப் **பிதாவிடத்தில் மனந்திரும்பி வாருங்கள்.** தேவனின் குமாரனான இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் நீங்கள் ஜெபம் பண்ணி உங்கள் உள்ளத்தில் காணப்படும் துக்கம், வேதனைகளை தேவனிடம் கூறுங்கள். தேவன் உங்களை சிருஷ்டித்த தேவன் என்பதால் உங்களைக் குறித்த அனைத்தையும் அறிந்து தம்மிடமாக உங்களை அழைத்துக் கொண்டாராகையால் **அவர் உங்களின் ஜெபங்களை ஏறெடுத்து உங்கள் உள்ளத்தை சுகப்படுத்துவார். அவர் ஒரு போதும் உங்களைத் தனிமைப்படுத்த மாட்டார். வெற்றியின் நாள்!**

ஜெபம்

அன்பான இயேசுவே! நீங்கள் சிருஷ்டிப்பின் தேவன் என்பதால் நீங்கள் எங்கள் வேண்டுதல்களை ஏற்றுக் கொள்ளும் தேவன். ஆகையால் நன்றி! இன்றும் என் ஜெபங்களை ஏறெடுத்து என் உள்ளத்தை சுகப்படுத்தி ஆறுதலிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்." (சங்கீதம் 91:15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஒக்டோபர்
14 புதன்

# பகைவர்களின் கரங்களிலிருந்து எம்மை மீட்கும் தேவன்!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 107 – 108

**"பகைஞன் கைக்கு அவர்களை விலக்கி இரட்சித்து, சத்துருவின் கைக்கு அவர்களை விலக்கி மீட்டார்."** (சங்கீதம் 106:10)

பிரியமான தேவப் பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் கர்த்தருடைய வல்லமையான செயல்களுக்காக ஸ்தோத்திரம் பண்ணி மகிழ்ந்திருக்கும் நாளாகும்படியாக வாழ்த்துகின்றேன்.** ஆவிக்குரிய தேவப் பிள்ளைகள் என்பதால் சரீர உபத்திரவங்கள், வேதனைகள், மன வேதனைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும். ஆத்மீக வாழ்க்கைக்கு விரோதமாக ஏற்படுகின்ற போராட்டங்களின் போது ஏற்படுகின்ற **உள்ளார்ந்த வேதனைகளோ ஏராளமாக இருக்கும். வாழ்க்கையில் முகங்கொடுக்கின்ற பலவிதமான தடைகளினால் தோல்வியடையும் போதும் வேதனைக்குள்ளாகிறோம்.**

தேவப் பிள்ளைகளே! **நீங்கள் தைரியமாயிருங்கள்!** எல்லா வேளைகளிலும் **எங்களை அன்பு செய்து அவருடைய கரங்களினால் எம்மை அரவணைத்து எங்களை ஆறுதல்படுத்தும் அன்பு தேவனொருவர் எம்மோடு இருக்கிறார்.** அவர் எங்களுக்குக் கூறியிருப்பதாவது, **உன்னைப் போல் உன் அயலானையும் நேசிப்பாயாக,** என்றாகும். உலகில் அனைத்து மனிதரும் தேவனது இந்த கட்டளைகளைக் கைக் கொள்ளுவார்களானால் மனிதர்களுக்கு ஏற்படுகின்ற **பிரச்சினைகள், துன்பங்கள் பெரும்பாலும் குறைந்துவிடும். ஏனென்றால் சில மனிதர்கள் மிகவும் சுயநலமாக அவர்களது நன்மைகள், நலன்களை மாத்திரமே கருத்திற் கொண்டு செயல்படுவார்கள்.** அப்படியான சந்தர்ப்பங்களில் அவர்கள் கரங்களால் மற்ற மனிதர்களுக்கு **அக்கிரமமானவைகள் நேரிட வாய்ப்புகள் உருவாகின்றன.**

தேவப் பிள்ளைகளே! ஆனாலும் **நீங்கள் பயப்படாதீர்கள்!** உங்களுக்கு அவ்வாறான அநீதிகள், அக்கிரமங்கள் யார் மூலமாவது இழைக்கப்படுமானால் உங்கள் தேவன் உங்களோடிருப்பதை நினைத்துக் கொள்ளுங்கள். **தேவன் உங்களுக்கு அதிகமான அன்பு செய்வதனால் அவ்வாறான மனிதர்களிடமிருந்து உங்களை மீட்டுக் கொள்வதற்கும், உங்கள் உள்ளத்தை தைரியப்படுத்தவும் உங்களை முன்னோக்கி கொண்டுச் செல்லவும் தீவிரமாய் செயல்படுவார்.** அவர் நீதியுள்ளவராகையால் தமது பிள்ளைகள் யாரும் அக்கிரமங்களினால் அநீதியினால் வேதனைப்பட இடங் கொடாத அவரது வல்லமையான கரங்களினால் அவர்கள் ஒவ்வொருவரையும் பாதுகாப்பார். மேலே கூறப்பட்ட **சங்கீதம் 106:10இல் எழுதப்பட்டுள்ளதாவது "பகைஞன் கைக்கு அவர்களை விலக்கி இரட்சித்து சத்துருவின் கைக்கு அவர்களை விலக்கி மீட்டார்"** என்றே. ஆகையால் காரணமின்றி **வீணாக கோபமுற்று அவற்றைக் குறித்து கலங்காதீர்கள்! உங்கள் தூய்மையான உள்ளத்தைக் காணும் தேவன் உங்களுக்கு பதில் தருவார். ஜெயத்தின் நாள்!**

ஜெபம்

என் நல்ல மேய்ப்பரே! உங்கள் பேரில் விசுவாசங் கொண்ட என் வீணான காரணங்களால் என் மேல் கோபமுற்று இருப்பவர்களோ அதிகம். ஆனாலும் அத்தகைய மனிதர்களிடமிருந்து என்னைக் காத்துக் கொள்ளுங்கள். இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவார்கள்; ஆனாலும் உன்னை மேற்கொள்ளமாட்டார்கள்; உன்னை இரட்சிக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன்..." (எரேமியா 1:19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஒக்டோபர்
15 வியாழன்

# நம் வாழ்வில் நன்மைகளையே செய்யும் ஒப்பற்ற தேவன்!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 109 – 110

**"கர்த்தர் எனக்கு நன்மைசெய்தபடியால் அவரைப் பாடுவேன்."**
(சங்கீதம் 13:6)

அன்பார்ந்த தேவப் பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் நம்மை ஆளுகை செய்கின்ற கர்த்தரின் உன்னதமான ஆசீர்வாதங்களோடு இன்றைய நாளை ஆரம்பிக்க வாழ்த்துகின்றேன்.** இயேசுகிறிஸ்துவின் மூலமாக தேவப் பிதாவின் உன்னத அழைப்பைப் பெற்ற பரலோக இராஜ்யத்திற்கு சொந்தமான பிள்ளையாக இருக்கின்ற **நீங்கள் அனைவரும் அதிஷ்டக்காரர்கள்!** ஏனெனில் தேவன் நன்மைகளைச் செய்கின்ற தேவன் என்பது மேலே பிரதான வசனத்தில் கூறப்படுகின்றது.

தேவப் பிள்ளைகளே! பரலோக தேவ பிதா தனது பிள்ளைகளைக் குறித்து மிகவும் கரிசனைக் கொண்டு அவர்களை எல்லா வேளைகளிலும் விசாரித்து அவர்களது வாழ்வில் நன்மைகளையே நிகழ்த்துகின்றார் என்பதையறிவோம். ஆகையால் **தாவீது ராஜா கூறுகின்றதாவது கர்த்தர் எனக்கு நன்மை செய்தபடியால் அவரைப்பாடுவேன் என்றே. என் வாழ்வில் 31 வருடக்காலமாக தேவனோடு இந்த விசுவாசப் பயணம் சென்று கொண்டிருக்கின்றேன்.** எனது வாழ்வில் இவ்வளவு காலமாக தேவன் செய்த நன்மைகள் எவ்வளவு என்று எண்ணில் கூற முடியாது ஒவ்வொரு நாளும் எனது வாழ்க்கையில் **எனது ஊழியத்தில் தேவன் நன்மைகளை, என் கண்களினால் கண்டும் அனுபவித்தும் வருகின்றேன்.**

தேவனுடைய பிள்ளைகளே! ஆனாலும் இவ்வளவு காலமாக **தேவனுடைய உள்ளத்தை வேதனைப்படுத்தும் அவரை கவலைக்குள்ளாக்கும் நிகழ்வுகள், பிழைகள், தவறுகள் என்னால் நடை பெறாமலில்லை. ஏனெனில் என்னுடைய ஊழியத்திற்குள் பலவித பிரச்சினைகள், உபத்திரவங்கள், சவால்கள், போராட்டங்கள் இடம் பெற்ற வேளைகளில் நான் உள்ளத்தில் பின்மாற்றமடைந்த சந்தர்ப்பங்கள் இல்லாமலும் இல்லை.** அப்படியே தேவனது உள்ளத்தை வேதனைக்குள்ளாக்கும்படியாக சிறு சிறு தவறுகள் நினையாத வண்ணமாக, அறியாமல் என்னால் நிகழ்ந்ததுண்டு. ஆனாலும் இவ்வளவாக நன்மைகளையே என் வாழ்வில் செய்கின்ற தேவன் நான் **நன்மைகளைச் செய்யும் போது எனக்கு பிரியமில்லாதவைகளை செய்கிறான்,** ஆகையால் இனிமேல் இவனுக்கு இனிமேல் நன்மைகளைச் செய்யமாட்டேனென்று ஒரு போதும் கூறியதில்லை. **எனக்கு மாத்திரமின்றி உங்களுக்கும் இவ்வண்ணமாக நன்மைகளையே செய்கின்ற தேவனாக இருக்கின்றார். ஆகையால் அன்போடு தேவனுடன் இணைந்து வாழுங்கள். வெற்றி மிக்க மனமகிழ்ச்சியின் நாள்!**

ஜெபம்

என் பரிசுத்தமுள்ள ஜீவனுள்ள தேவனே! நீங்கள் நன்மைகளைச் செய்யும் நல்ல தேவன் உங்கள் நன்மைகளுக்குள் நான் நல்வாழ்வு வாழ ஆயத்தமாகும்படி, பிரியமுள்ளவனாக வாழும்படிக்கு கிருபை செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"...அவரை அண்டிக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள்." (சங்கீதம் 2:12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஒக்டோபர்
16 வெள்ளி

# தம் சொந்த ஜனங்களுடன் உடன்படிக்கை செய்யும் கர்த்தர்!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 111 – 112

**“அதற்கு அவர்: இதோ, நான் ஒரு உடன்படிக்கைபண்ணுகிறேன்; பூமியெங்கும் எந்த ஜாதிகளிடத்திலும் செய்யப்படாத அதிசயங்களை உன் ஜனங்கள் எல்லாருக்கு முன்பாகவும் செய்வேன்;...”**
(யாத்திராகமம் 34:10)

அன்பார்ந்த தேவப் பிள்ளைகளே! அதிசயங்களை காணச் செய்யும் **ஜீவனுள்ள தேவனின் நாமத்தால் இன்று சுபநாளாக வேண்டுமென ஆசீர்வதிக்கிறேன்.** பரலோகத்திலே வாசம் பண்ணுகிற தேவனை அறிந்துக் கொண்ட நீங்கள் ***மிக அதிர்ஷ்டசாலிகள் ஆவீர்கள்.*** உங்கள் வாழ்க்கையின் நிலை எவ்வகையான சூழ்நிலையிருந்தாலும் அவர் உங்களை மிகவும் நேசிக்கிறார். **நீங்கள் சோதனைககளுக்கு முகம் கொடுத்து தோல்வியடைந்து ஆத்துமாவிலே பின்மாற்றமடைந்து காணப்பட்டாலும் நீங்கள் மனஸ்தாபப்பட்டு அவரிடம் திரும்பி எப்போது வருவீர்கள் என எதிர் பார்த்துக் காத்திருக்கிறார்.** இன்னுமாக நீங்கள் பாவத்தை உணர்ந்து மனந்திரும்பி அவரிடம் வரும்போது உங்களை அவர் அன்புடன் அரவணைத்துக் கொள்வார்.

தேவப் பிள்ளைகளே! இன்றைய எம் முதல் வசனம் **யாத்திராகமம் 34:10“எம் தேவனாகிய கர்த்தர் மோசே என்ற தேவ மனிதனிடம் பண்ணின பொருத்தனையாகும்.”** இதோ நான் ஒரு உடன்படிக்கை பண்ணுகிறேன் பூமியெங்கும் எந்த ஜாதிகளிடத்திலும் செய்யப்படாத அதிசயங்களை உன் ஜனங்கள் எல்லாருக்கும் முன்பாகவும் செய்வேன் என்றார். இவ் வார்த்தைகளின் காணப்படும் **விஷேசித்த காரியம் யாதெனில் முழு பூமியின் மீதெங்குமோ- சகல ஜாதிகளின் மத்தியிலுமோ செய்யப்படாத அதிசயமான கிரியைகளை உன் ஜனங்களுக்கு முன்பாக செய்வேன் என்று மோசேக்கு பொருத்தனை செய்ததாகும்.** இதன்படி இந்நாட்களை நோக்குவோமானால் தேவன் எம் வாழ்விலும் இதுவரை கண்டு, அறியாதவற்றை செய்யப் போகிறார் என்பதாகும்.

தேவனுடைய பிள்ளைகளே! மோசேயின் நாட்களில் மாத்திரமல்ல இந்நாட்களிலும் இயேசுக்கிறிஸ்து மூலம் **தேவனுடைய சந்ததிகளாக்கப்பட்ட புதிய ஏற்பாட்டுக்குரியவாகளாகிய எம் அனைவரோடும் கூட அவர் இந்த உடன்படிக்கை செய்துள்ளார்.** அதன்படி எம் வாழ்க்கையிலும் அவர் செய்யப் போவதை நாம் அறியோம். ஆனாலும் அவைகள் எம்மை வியப்படைய செய்வதோடு மனிதர்களையும் **வியப்பில் ஆழ்த்தும் அற்புதங்களும், அதிசயங்களும் நிறைந்தவைகளாய் இருக்கும். இன்றைய தினத்திலும் உங்கள் பிரச்சினைகள் யாவற்றிற்கும் எவ்வகையில் எப்படி விடுதலை கிடைக்கும் என்பது நீங்கள் அறியாத விடயமாகும்.** ஆயினும் நீங்கள் விசுவாசிக்கும் ஆண்டவர் உங்கள் பிரச்சினைகளுக்கு விடுதலை அளிப்பார். அவ் விடுதலை ஆச்சரியமானதாயும் புதுமையானதாயும் விளங்கும் என்பது நிச்சயம். உங்கள் இருதயத்திற்கு கலக்கத்தையோ, பயத்தையோ உண்டு பண்ண இடமளிக்காதிருங்கள். நீங்கள் நம்பிக்கையோடிருங்கள். **ஜெயம் தரும் நாள்!**

ஜெபம்

என் அன்புள்ள தேவனே! மோசே என்னும் தேவ மனிதனோடு செய்த உடன்படிக்கையின்படி அவரோடிருந்த மனிதர்களுக்கு முன்பாய் அதிசயங்களை காணச் செய்தீர்கள். இன்றும் எனக்கும் பொருத்தனைகளை அளித்து நிறைவேற்றி என்னோடிருந்து ஆசீர்வதிக்குமாறு இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

“நீங்கள் புறஜாதிகளை நோக்கிப்பார்த்து, ஆச்சரியப்பட்டுப் பிரமியுங்கள்; விவரிக்கப்பட்டாலும் நீங்கள் விசுவாசியாத ஒரு கிரியையை உங்கள் நாட்களில் நடப்பிப்பேன்.” (ஆபகூக் 1:5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஒக்டோபர்
17 சனி

# அலையான பிரச்சினைகளை அமைதலாக்கும் ஆறுதலின் தேவன்!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 113 – 114

**"அதற்கு அவர்: அற்பவிசுவாசிகளே! ஏன் பயப்படுகிறீர்கள் என்று சொல்லி; எழுந்து, காற்றையும் கடலையும் அதட்டினார். உடனே, மிகுந்த அமைதல் உண்டாயிற்று."** (பர்.மத்தேயு 8:26)

எனக்கன்பான தேவப் பிள்ளைகளே! ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்துவின் வல்லமை மிகுந்த நாமத்தினால் **இன்றைய தினத்தில் உங்கள் வாழ்வினிலே எல்லாக் காரியங்களும் ஆசீர்வாதமாக அமைய வாழ்த்துகின்றேன்.** தேவனுடைய வாயிலிருந்து வெளிப்படும் வசனங்கள் யாவும் வல்லமை பொருந்தியவை. **அவர் நாவினால் அறிக்கை பண்ணிய வார்த்தைகள் வெறுமனே திரும்பாது தேவனுடைய விருப்பத்தை செயல்படுத்தும்.** ஆகையால் **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!** தேவன் மீது நம்பிக்கை கொண்டிருங்கள். ஏனெனில் இன்றைய தலைப்பு வேத வசனத்தில் தம் சீஷர்களை நோக்கி இயேசுகிறிஸ்து **"அற்ப விசுவாசிகளே" என்று கடிந்துக் கொள்கிறார்.**

தேவப் பிள்ளைகளே! இயேசுகிறிஸ்து தம் சீஷர்களுடன் படகில் ஏறி அக்கரைக்குப் போகும்படியாக **கடலில் பயணம் செய்தார்.** அப்பொழுது **படகு அலைகளினால் மூடப்படத்தக்கதாய்க் கடலில் பெருங்காற்று உண்டாயிற்று.** அவரோ நித்திரையாக இருந்தார். அப்போது **அவருடைய சீஷர்கள் வந்து அவரை எழுப்பி ஆண்டவரே! எங்களை இரட்சியும், மடிந்து போகிறோம் என்றார்கள்.** அப்போது இயேசுகிறிஸ்து அவர்களை நோக்கி சொல்லப்பட்ட வார்த்தைகளே இச்செய்தியின் பிரதான வசனமாக காணப்படுகிறது. **பரி.மத்தேயு 8:26 "அற்ப விசுவாசிகளே ஏன் பயப்படுகிறீர்கள் என்று சொல்லி எழுந்து காற்றையும், கடலையும் அதட்டினார். உடனே மிகுந்த அமைதல் உண்டாயிற்று"** என்பதாக கூறுகிறது.

தேவப் பிள்ளைகளே! **"உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு ஆனாலும் திடன் கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன்"** என்று இயேசுகிறிஸ்து எமக்கு கூறியுள்ளார். **அதைரியப்படாதிருங்கள்! கடலில் பெருங்காற்று உண்டாகி படகு** அலைகளினால் மூடப்படும் அளவிற்கு எழும்பியது போல் உங்கள் வாழ்விலே இடைவிடாது ஏற்படும் **பிரச்சினைகள், கஷ்டங்கள்** போன்றவைகளினால் **நீங்கள் கலங்கி சோர்வுற்றிருக்கிறீர்களா? இப்படியாயிற்றே, என பயப்படாதீர்கள். இயேசுகிறிஸ்து மீது உறுதியான விசுவாசத்தோடிருங்கள்.** அவர் உங்களோடிருந்து அவற்றை அதட்டி உங்கள் வாழ்வை விட்டு அகற்றி போடுவார். இன்றும் அவர் மாறாதவராய் உங்கள் இரட்சகராய் உங்களோடிருக்கிறார். **ஜெயம் தரும் நாள்!**

ஜெபம்

என் அன்பின் தேவனே! கடலில் ஏற்படும் புயலின் நிமித்தமாய் மேலெலும்பும் அலைகளைப் போல் என் வாழ்க்கையில் எனக்கெதிராய் வரும் பிரச்சினை, சவால், துன்பம் போன்றவற்றிலே தேவரீர் என்னோடிருந்து என்னை அவற்றிற்கு நீங்கலாக்கி அமைதலை கட்டளையிடும்படி இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அப்பொழுது நீ கூப்பிடுவாய், கர்த்தர் மறுஉத்தரவு கொடுப்பார்; நீ சத்தமிடுவாய்: இதோ, நான் இருக்கிறேன் என்று சொல்லுவார்..." (ஏசாயா 58:9 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஒக்டோபர்
18 ஞாயிறு

## உங்கள் விண்ணப்பங்களுக்கு செவி கொடுக்கும் இஸ்ரவேலின் தேவன்!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 115 – 116

**"கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: இஸ்ரவேல் வம்சத்தாருக்காக நான் இதை அநுக்கிரகஞ்செய்யும்படி அவர்கள் என்னிடத்தில் விண்ணப்பம் பண்ணவேண்டும்;..."** (எசேக்கியேல் 36:37)

தேவனுக்குள் பிரியமானவர்களே! ஜீவனுள்ள தேவன் **இன்றும் உங்களை ஆசீர்வதிக்குமாறு வாழ்த்துகின்றேன்.** இயேசுகிறிஸ்துவின் மூலமாய் எம்மை அழைத்து **தம் சுவீகாரப் பிள்ளைகளாய் மாற்றிக் கொண்டதன் நிமித்தம் நாம் அதிர்ஷ்டசாலிகளாய் இருக்கிறோம்.** ஏனெனில் இயேசுகிறிஸ்துவின் மீது நாம் கொண்ட விசுவாசமே எமக்கு இரட்சிப்பை அளித்தது. இதனாலேயே நாம் இஸ்ரவேல் வம்சமாகினோம்.

தேவப் பிள்ளைகளே! மேலே தரப்பட்ட பிரதான வசனமாகிய **இஸ்ரவேல் வம்சத்தாருக்கு நான் அநுக்கிரகஞ் செய்யும்படி அவர்கள் என்னிடத்தில் விண்ணப்பம் பண்ண வேண்டும்.** மந்தை பெருகிறது போல் அவர்களில் மனிதரைப் பெருகப் பண்ணுவேன் என்பதாக. இதன்படி இஸ்ரவேல் வம்சத்தை பெருகப் பண்ணுவேன் என்றுரைத்த, **இஸ்ரவேல் வம்சத்தினருக்கு வாக்களித்த தேவன் எம்மையும் அவ்வண்ணமாகவே ஆசீர்வதிப்பார் என்று அறியலாமல்லவா?** இஸ்ரவேல் வம்சமாக மாறிய இரட்சிப்பை பெற்ற தேவப் பிள்ளைகளே! எமக்கும் இந்த பொருத்தனையானது, அதாவது வம்சம் பெருக மாத்திரமல்ல **சகல விதமான நன்மைகளால் எம்மை ஆசீர்வதிப்பார் என்பது சத்தியமாகும்.** அதுமட்டுமல்ல **அவர்களுடைய விண்ணப்பங்களுக்கு செவி கொடுப்பேன்,** என்பதிற்கிணங்க நாம் எவைகளை கேட்போமா அவைகளை எவ்வளவுக்கு அதிகமான எண்ணிக்கை கொண்டவைகளாக இருந்தாலும், அவைகள் எத்தனை தடவைகளாக இருக்கிறது என்பதனை குறித்து அவர் நினைக்கமாட்டார்.

தேவப் பிள்ளைகளே! நாம் அதிகமாய் நேசிக்கும் விசுவாசமான நண்பன் கூட எம் அங்கலாய்ப்பை புரிந்து கொள்ளாது **நாம் அவருடன் பகிர்ந்துக் கொள்ளும் எமது பிரச்சினைகளை குறித்து விசாரிக்காமல் நாம் சொல்வதை செவி கொடுத்து கேளாதவர்களாய் இருக்கலாம்.** ஆனால் எம் ஆண்டவர் இஸ்ரவேலரின் தேவன் எம் விண்ணப்பங்களுக்கு செவி கொடுக்கிறார். ஏனெனில் அவர் எம்மீது காட்டும் சுயாதீனமான அன்பு எத்தகையது? இந்நாளினிலும் **உங்கள் இருதயத்தை கலங்க வைக்கும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதாயிருக்கிறது.** யாருக்கு இதை கூறினாலும் பிரயோஜனம் இல்லை யாராலும் எனக்கு உதவ முடியாது, உதவ மாட்டார்கள் என நினைத்து வேதனைப்படுகிறீர்களா? **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!** உங்கள் குரலை கேட்பவரும் **உங்கள் விண்ணப்பங்களுக்கு செவி கொடுப்பவருமான தேவனிடம் உங்கள் விண்ணப்பங்களை ஒப்புக் கொடுங்கள். அவர் உங்களுக்கு பதில் தருவார். ஆசீர்வாதமான நாள்!**

ஜெபம்

அன்பு நிறைந்த பரலோகப் பிதாவே! இஸ்ரவேல் தேவனாகிய இயேசுகிறிஸ்துவினால் உம்மை ஏற்றுக் கொண்டு இஸ்ரவேல் வம்சமாய் எம்மை மாறச் செய்தவரே, என் விண்ணப்பத்தைக் கேட்டு மறுஉத்தரவு அருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்." (எரேமியா 33:3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஒக்டோபர்
19 திங்கள்

## விசுவாசமும் அவிசுவாசமும்!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 117 – 118

**“தேசத்தைச் சுற்றிப்பார்க்கப்போன அந்த மனிதரில் நூனின் குமாரனாகிய யோசுவாவும், எப்புன்னேயின் குமாரனாகிய காலேபும்மாத்திரம் உயிரோடிருந்தார்கள்.”** (எண்ணாகமம் 14:38)

அன்புள்ள தேவப் பிள்ளைகளே! ஜீவனுள்ளவரும் எங்களை நேசிக்கிறவருமான **இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இன்றும் நல்ல நாளை பெறும்படியாக வாழ்த்துகின்றேன்.** ஜீவிக்கின்ற தேவ பிதாவானவரைக் குறித்து அறிந்துக் கொள்ளவும் **அவருடைய சொந்த பிள்ளைகளாய் மாறவும் அவருடைய உதவி ஒத்தாசைகளை பெறவும் முடிந்தது தேவனுடைய மகா வரப்பிரசாதமாகும்.** ஆண்டவரைக் குறித்து அறிந்த நாங்கள் **ஆத்துமாவிலே** அவரை நெருங்கி ஜீவிப்பது அவசியமாகும். அப்படி நாம் ஜீவிக்கும் போது தேவன் எமக்கு **அநேக ஆசீர்வாதங்களை அருளுவார்.**

தேவப் பிள்ளைகளே! ஆத்மீக பிள்ளைகளாகிய எம் வாழ்வில் ஏற்படும் அநேக காரணங்கள் நிமித்தமாக ஆத்துமாவிலே **பின்மாற்றம் ஏற்பட்டு தேவ பிதாவை விட்டு விலகியிருக்கலாம்.** அப்படியாயின் எம் வாழ்வின் ஆசீர்வாதத்திற்கு அது தடையாகலாம். ஆத்மீகர்களாகிய நாம் ஒரு காரியத்தை ஆரம்பிக்க முனையும் போது விசுவாசத்தோடு அதில் ஈடுபட வேண்டும். **எண்ணாகமம் 14:38**இல் **“காலேப்பும், யோசுவாவும் விசுவாசத்தோடு வார்த்தைகளை வெளிப்படுத்தின-படியால் தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டார்கள்.”** இக்காரியம் நடந்தது எப்படியெனில் தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு பொருத்தனை பண்ணிய கானான் தேசத்தை பார்வையிட்டு வரும்படியாக **மோசே பன்னிரண்டு கோத்திரங்களிலிருந்து ஒவ்வொருவரை தெரிந்து பன்னிரண்டு பேராக சேர்த்து அனுப்பினார்.**

தேவப் பிள்ளைகளே! சென்று திரும்பிய இவர்களில் **பத்து பேர் தேசத்தை குறித்து துர்ச்செய்தியை பரப்பினார்கள்.** ஆனால் யோசுவாவும், **“காலேப்பும் மோசேக்கு முன்பாக ஜனங்களை அமர்த்தி நாம் உடனேயே போய் அதை சுதந்தரித்துக் கொள்ளுவோம், நாம் அதை எளிதாய் ஜெயித்துக் கொள்ளலாம்”** என்றார்கள். இவர்கள் விசுவாசத்துடன் வெளிப்படுத்திய இவ்வார்த்தைகள் தேவனுக்கு மிகப் பிரியமானதாக இருந்தது. ஆனால் மற்ற பத்து பேர் சொல்லிய **துர்ச்செய்தியின்** நிமித்தம் **ஜனங்கள் யாவரும் பயந்து அழுது கொண்டிருந்தார்கள்.** இதனால் தேவ கோபம் அவர்கள் மேல் இறங்கியதினால் வாதையினால் செத்தார்கள். **“அவர்களோடு கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்த மனிதர்கள் யாவரும் வனாந்தரத்திலே மரித்துப் போனார்கள் என்றும் காலேப்பும், யோசுவாவும் மாத்திரம் அத்தேசத்தில் பிரவேசித்தார்கள் என்று எண்ணாகமம் 14:38**இல் கூறப்பட்டுள்ளது. **நீங்களும் மனிதர்களின் விசுவாசமற்ற வார்த்தைகளுக்கு செவி கொடுத்து ஆசீர்வாதங்களை இழந்து போகாதிருங்கள். விசுவாசத்தோடு வாழ்வினை முன்னோக்கிக் கொண்டுச் செல்லுங்கள். ஆசீர்வாதமான நாள்!**

ஜெபம்

என் இயேசுவே! உங்களை விசுவாசிப்பவர்கள் மீது கிருபையை பொழிபவரே! உமக்கு நன்றி! காலேப், யோசுவாவைப் போல் நாமும் விசுவாசத்தில் நிலைத்திருந்து உம்முடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள கிருபை கூர்ந்து ஆசீர்வதிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

“அப்படியே, ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறதுபோல, கிரியைகளில்லாத விசுவாசமும்செத்ததாயிருக்கிறது.” (யாக்கோபு 2:26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஒக்டோபர்
**20** செவ்வாய்

**வானத்திலும்**
**கீழே பூமியிலும் நீரே**
**மெய்யான தேவன்!**

**வேதவாசிப்பு**
சங்கீதம்
அதி: 119 – 120

**"...உங்கள் தேவனாகிய கர்த்தரே உயர வானத்திலும் கீழேபூமியிலும் தேவனானவர்."** (யோசுவா 2:11)

என் அன்பார்ந்த தேவப் பிள்ளைகளே! எம் சிருஷ்டிகரான ஜீவனுள்ள **இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தினால் இப்புதிய நாள் நல்ல நாளாக அமைய வெண்டுமென வாழ்த்துகின்றேன்.** இஸ்ரவேலரின் தேவனாகிய கர்த்தர் இன்றும் ஜீவிக்கின்றார். அவர் எமது தேவ பிதாவானவர் அவரது **சொந்த புத்திரர்களாக இவ்வுலகில் வசிக்கும் யாவரும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே!** ஆகையால் **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!**

தேவப் பிள்ளைகளே! மேலே கொடுக்கப்பட்ட எமது இன்றைய முதல் வேத வசனம் **யோசுவா 2:11**இல் **"யோசுவா எரிகோவை வேவுபார்க்கும்படி இரண்டு மனிதரை இரகசிய வேவுக்காரராய் அனுப்பினான். அவர்கள் போய் ராகாப் என்னும் பெயர் கொண்ட வேசியின் விட்டுக்குள் பிரவேசித்து அங்கே தங்கினார்கள்."** ராகாப் என்னும் அந்த ஸ்திரி தன்னிடம் வந்தவர்கள் யார் என்று அறிந்தவுடன் அவள் அவர்களிடம் இவ்விதமாக கூறினாள். கர்த்தர் உங்களுக்கு தேசத்தை ஒப்புக் கொடுத்தாரென்றும் உங்களைப் பற்றி எங்களுக்குத் திகில் பிடித்திருக்கிறதென்றும் **உங்களைக் குறித்து தேசத்துக் குடிகள் எல்லாரும் சோர்ந்து போனார்கள் என்றும் அறிவேன். நீங்கள் எகிப்திலிருந்து புறப்பட்ட போது கர்த்தர் உங்களுக்கு முன்பாக சிவந்த சமுத்திரத்தின் தண்ணீரை வற்றிப் போகப் பண்ணினதையும் நீங்கள் யோர்தானுக்கு அப்புறத்தில் சங்காரம் பண்ணின எமோரியரின் இரண்டு ராஜாக்களாகிய சீகோனுக்கும், ஓகுக்கும் செய்ததையும் கேள்விப்பட்டோம்.** கேள்விப்பட்ட போது எங்கள் இருதயம் கரைந்து போயிற்று. உங்களாலே எல்லாருடைய தைரியமும் அற்றுப் போயிற்று உங்கள் தேவனாகிய **கர்த்தரே உயர வானத்திலும் கீழே பூமியிலும் தேவனானவர் என்றாள்.**

தேவப் பிள்ளைகளே! அவர் இன்றும் அப்படியே இருக்கிறார் அல்லவா? உங்கள் தகப்பனாகிய **கர்த்தர் இஸ்ரவேலரின் தேவனாக இருக்கிறபடியால் நீங்களும் அவருடைய வார்த்தைகளை பின்பற்றும்படியாக அவரது வசனங்களுக்கு செவி கொடுங்கள்.** அதன்படி நல் வாழ்க்கை வாழுங்கள். அப்போது உங்கள் வாழ்க்கைக்குரிய சகல காரியங்களையும் **அவர் கவனிப்பார்.** அது மாத்திரமல்ல ஒருவரும் **உங்களுக்கு விரோதமாக செயல்பட முடியாதபடி கிரியை செய்ய வல்லவராயிருக்கிறார். ஏனெனில் இன்றும் உங்களோடிருப்பவர் உயரே வானத்திலும், கீழே பூமியிலும் தேவனானவர் இஸ்ரவேலின் தேவன் ஒருவர் மாத்திரமே! தேவ அநுக்கிரகத்தின் ஆசீர்வாதமான நாள்!**

**ஜெபம்**

என் நல்ல மேய்ப்பரே! நீங்கள் சதாகாலத்திற்கும் தேவனாவீர்கள். இஸ்ரவேலரோடு இருந்தவரே! என்னோடும் அவ்வண்ணமாகவே இருப்பவரே! ஏன் வாழ்விலும் உங்கள் பலத்த காரியங்கள் செயல்படுவதால் நன்றி! என்னையும் அதிகமாய் ஆசீர்வதித்து வழிநடத்துமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"அப்பொழுது கர்த்தருடைய நாமம் உனக்குத் தரிக்கப்பட்டது என்று பூமியின் ஜனங்களெல்லாம் கண்டு, உனக்குப் பயப்படுவார்கள்." (உபாகமம் 28:10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஒக்டோபர்
21 புதன்

## உங்களைக் காக்கும் தேவன்!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 121 – 122

**"என் பிதாவின் தேவனாகிய ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் பயபக்திக்குரியவரும் என்னோடிராமற்போனால், நீர் இப்பொழுது என்னை வெறுமையாய் அனுப்பிவிட்டிருப்பீர்;..."** (ஆதியாகமம் 31:42)

அன்பார்ந்த தேவப் பிள்ளைகளே! **ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் தூய நாமத்தால் உங்களுக்கு இன்றைய தினம் வெற்றிச் சிறந்த நாளாக அமையுமாறு வாழ்த்துகிறேன்.** ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனாகியவருமான **கர்த்தர் தாமே இன்றும் ஜீவனுள்ளவராய் உங்களோடிருப்பாராக!** அவர் நீதியின் தேவன். ஆகையால் அவர் தமது பிள்ளைகளுக்கு தமது **நீதியையும், நேர்மையையும் விளங்கச் செய்வார்.**

தேவப் பிள்ளைகளே! யாக்கோபு அராமிலிருக்கும் தன் தாயாருடைய சகோதரனாகிய லாபானின் வீட்டிற்குப் போனான். அதன் பிறகு **லாபானுடைய இளைய குமாரத்தி ராகேல் மேல் பிரியமாயிருந்தான். ராகேலை விவாகம் பண்ணும்படியாக ஏழு வருடகாலம் அவ்வீட்டில் சம்பளமில்லாமல் வேலை செய்தான்.** ஆனால் லாபான் யாக்கோபை ஏமாற்றி தன்னுடைய மூத்த குமாரத்தி லேயாளை திருமணம் செய்து கொடுத்தான். யாக்கோபு லாபானை நோக்கி ஏன் எனக்கு இப்படி செய்தீர்? என்று கேட்டான். அதற்கு லாபான் மூத்தவள் இருக்க இளையவளைக் கொடுப்பது இவ்விடத்து வழக்கம் அல்ல அவளுக்காக இன்னும் ஏழுவருஷம் என்னிடத்தில் வேலை செய் என்றான். அப்பொழுது இளையவளான ராகேலையும் தருவேன் என்றான். யாக்கோபு அதே போல் செய்து அவளையும் விவாகம் செய்தான். **லாபானுடைய குமாரத்திகள் நிமித்தம் பதினான்கு வருடங்களும் லாபானுடைய மந்தைகள் நிமித்தம் ஆறு வருடங்களுமாக ஆக மொத்தமாக இருபது வருடங்கள் லாபானுடைய இல்லத்தில் வாழ்ந்தான். லாபான் யாக்கோபின் கூலியை பத்து தடவை மாற்றினான்.**

தேவப் பிள்ளைகளே! கடைசியாக தன் **இரண்டு மனைவிகள், பிள்ளைகள் தான் சம்பாதித்த சகல சொத்துகளை எடுத்துக் கொண்டு கானான் தேசத்தை நோக்கி புறப்பட்டு போனான்.** ஏனெனில் தேவன் அவனுக்கு உத்தரவு அருளினார் என்று **ஆதியாகமம் 31:3**இல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் **லாபான், யாக்கோபு தன்னை விட்டு போய் விட்டதை அறிந்து அவனை தொடர்ந்து விரட்டி வந்தான்.** ஒரு நாள் இரவு கனவில் தேவன் தோன்றி **நீ யாக்கோபோடே நன்மையே அன்றித் தீமை ஒன்றும் பேசாதபடிக்கு எச்சரிக்கையாயிரு** என்றார். **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக! தேவன் உங்களோடிருக்கிறபடியால் உங்களை ஒருவரும் ஏமாற்ற முடியாது. ஜெயம் தரும் நாள்!**

ஜெபம்

எங்கள் பரலோக தேவனே! யாக்கோபின் தேவனே! நீங்கள் என் தேவபிதாவாயிருக்கிறீர்கள். ஆண்டவரே யாரும் என்னை ஏமாற்றாதபடிக்கு என்னைக் காத்துக் கொள்ளும்படி இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"நியாயத்தைக் கைக்கொள்ளுகிறவர்களும், எக்காலத்திலும் நீதியைச்செய்கிறவர்களும் பாக்கியவான்கள்." (சங்கீதம் 106:3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஒக்டோபர்
22 வியாழன்

# இயேசுவின் நாமத்தின் நிமித்தம் நிந்திக்கப்பட்டால் அதுவே பெரிய பாக்கியம்!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 123 – 124

"நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள்;..." (1 பேதுரு 4:14)

தேவனுக்குள் பிரியமானவர்களே! ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தினால் **உங்கள் ஆத்துமா வாழ்கிறது போல் நீங்களும் சுகமாய் வாழும்படி இன்றைய தினத்தில் உங்களை வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன்.** அவரை விசுவாசித்து இரட்சகர் என ஏற்றுக் கொண்டவர்களும் தம் வாழ்க்கையை சம்பூரணமாக **அவருக்கு அர்ப்பணித்தவர்கள் பாக்கியவான்களாகவும், ஆசீர்வதிக்கப்பட்டவா-களாகவும் இருக்கிறார்கள்.** ஏனெனில் அவர் பரலோகப் பிதாவின் ஒரே பேறான குமாரனான அவர் மீது நீங்கள் கொண்டிருக்கும் **விசுவாசத்தின் பிரகாரம் நீங்களும் பரலோகப் பிதாவின் சொந்தப் பிள்ளைகளாயிருக்கிறீர்கள்.**

தேவப் பிள்ளைகளே! பரலோகத்தில் வாசம் பண்ணுகிற சிருஷ்டிகர் பரலோக **பிதாவின் சுதந்திரமான பிள்ளைகளாகும்படி கிடைக்கப் பெற்றதும் இயேசுகிறிஸ்துவானவரோடு பரலோக ராஜ்யத்தில் பங்கும், உரிமையும், உள்ளவர்களாக மாறியதும் எவ்வளவு பெரிய பாக்கியம்.** உலக மனிதனுக்கு இப்படியாகுமா? என நினைத்துப் பாருங்கள். உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக! மேலே காணப்படும் வேதாகமத்தின் வசனம் சொல்கிறது, **நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள்.** ஏனென்றால் தேவனுடைய **ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள் மேல் தங்கியிருக்கிறார்... என்பதாக.** ஆயினும் இயேசுகிறிஸ்துவின் பிள்ளையாக இருப்பதால் இவ் உலகிலே எமக்கு உபத்திரவங்கள், பிரச்சினைகள், துக்கங்கள், கலக்கங்கள், சோதனைகள் ஏற்படும் போது எம் உள்ளம் பின்மாற்றமடையும் நிலை ஏற்படக்கூடும்.

தேவப் பிள்ளைகளே! இன்றைய தின பிரதான வசனத்தின் மூலம் ஆண்டவர் **எம்மை பெலப்படுத்துகிறார்.** நீங்கள் இயேசுகிறிஸ்துவைக் குறித்து தெரிந்துக் கொண்டவரும் அவரையே பின்பற்றுகிறபடியால் **உங்கள் இல்லத்தில், தொழில் புரியும் இடங்களில், பாடசாலைகளில், உங்கள் ஊரில், நீங்கள் வாழும் பிரதேசத்தில், உங்கள் நண்பர்கள், அயலவர்கள, உற்றார், உறவினர்கள் இவர்கள் மத்தியிலும் உங்களுக்கு நிந்தைகள் ஏற்படலாம் என இன்றைய வேத வசனத்தில் குறிப்பிட்டு ஞாபகப்படுத்துகிறது. ஆயினும் உங்களுக்கு நிந்தனை ஏற்பட்டால் அவை உங்கள் வாழ்க்கையில் பாக்கியமாகும்.** ஏனெனில் நிந்தனைகள் யாவும் ஆசீர்வாதங்களாக மாறும் என தேவன் கூறியுள்ளார். நிந்தனைகள் உங்களை சூழ்ந்துக் கொண்டாலும் **நீங்கள் ஒரு போதும் கைவிடப்பட்டுப் போவதில்லை. ஆகையால் பெலனடைந்து ஜெயம் பெறுங்கள். இன்றும் ஜெயம் தரும் நாள்!**

ஜெபம்

என் இயேசுவே! உங்கள் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவினால் மீட்கப்பட்டு உங்களை பின்பற்றும் நான் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதால் நன்றி! அதே போல் உங்கள் நாமத்தின் நிமித்தம் எனக்கு ஏற்படும் சகல நிந்தைகளையும் சகித்து உமக்குள் வாழ எனக்கு தயை கூர்ந்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்;" (பரி.மத்தேயு 5:11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஒக்டோபர்
23 வெள்ளி

# உங்கள் விசுவாசம் உங்கள் கிரியைகளினால் வெளிப்படும்!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 125 – 126

**"விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக்குறித்துத் தேவஎச்சரிப்புப்பெற்று, பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுபண்ணினான்;... "** (எபிரேயர் 11:7)

பிரியமான தேவப் பிள்ளைகளே! ஜீவிக்கின்ற மகிமையின் தேவன் **இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஆத்மீக வாழ்விலே முன்னோக்கி நம்பிக்கையுடன் நடத்திச் செல்லும் உங்களுக்கு இன்றும் விசுவாசத்தினால் யாவற்றிலும் ஜெயம் பெறும்படியாக வாழ்த்துகின்றேன். எம் கண்களால் காண்பதை விசுவாசிக்க முடியும்.** ஆனால் கண்காணாததை விசுவாசிப்பது இயலாத காரியமாகும். ஆயினும் **ஆத்மீகர்களாகிய நாம் காணாதவைகளை விசுவாசிக்கிறவர்களாக இருக்க வேண்டும்.** ஆகையால் வேதாகமத்தின் வசனங்களை மிக ஆவலாய் உணர்ந்து வாசிக்கும் போது **எமது விசுவாசத்தின் வளர்ச்சியை அதிகப்படுத்திக் கொண்டு விசுவாசத்தில் வளர்ச்சியடையலாம்.**

தேவப் பிள்ளைகளே! **"விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது"** என **எபிரேயர் 11:1**இல் எழுதப்பட்டுள்ளது. உதாரணமாக நீங்கள் பஸ் வண்டியிலோ அல்லது புகையிரதத்திலேயோ பயணப்படும்படி அதில் ஏறி அதன் சாரதி அமர்ந்திருக்கும் ஆசனத்திற்கு அருகில் சென்று யார் அதன் ஓட்டுனர் என்றோ அல்லது சாரதியை நோக்கி என் பயணம் முடிவுறும் வரை ஒரு பிரச்சினையும் இன்றி என்னைக் கொண்டு செல்வீர்களோ? என்று கேட்கவோ, பார்க்கவோ மாட்டீர்கள் அல்லவா? **அதே போல் ஆத்மீக பிள்ளைகளாகிய நாம் எம் வாழ்வினை அவருக்கு ஒப்புக் கொடுத்த பின்னர் எம் எதிர் காலத்தை குறித்தோ அல்லது அடுத்த நாளைப் பற்றியோ எண்ணி மிக கலங்குகிறவர்களாய் இருக்கக்கூடாது. உங்கள் முதிர் வயதுவரைக்கும் நான் அப்படி செய்வேன், நரை வயது வரை மட்டும் நான் உங்களைத் தாங்குவேன். இனிமேலும் நான் ஏந்துவேன், நான் சுமப்பேன், தப்புவிப்பேன் என்று எமக்கு வாக்களித்த தேவனுடைய வார்த்தைகளை மறந்து விடலாமா?.**

தேவப் பிள்ளைகளே! மனிதனை நம்பி அவனை நாங்கள் விசுவாசிக்க எம்மால் முடியுமானால், அவனை உருவாக்கியவரை குறித்து எவ்வளவாய் விசுவாசம் கொள்ள வேண்டும்? **எபிரேயர் 11:27**இன்படி **"மனிதனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது பூமியை நிக்கிரகம் பண்ணும்படியாக தேவன் வானத்திலிருந்து பூமியின் மீது மழையை வருஷிக்கப் பண்ணி பூமியின் மீது ஜலப்பிரளயத்தை உண்டு பண்ணப் போவதாக நோவாவுக்கு அறிவித்து அவருடைய கட்டளையின்படி அவரது யோசனை பிரகாரம் தன் குடும்பத்தை இரட்சிக்க ஒரு பேழையை உண்டு பண்ணினான்."** நீங்களும் நோவாவைப் போல், அவர் தேவனுடைய வார்த்தைகளை விசுவாசித்தது போல உங்கள் விசுவாசத்தை பெருகப் பண்ணி செயல்படுங்கள். **தேவ அநுக்கிரகத்தின், ஆசீர்வாதத்தின் நாள்!**

ஜெபம்

என் நல்ல மேய்ப்பரே! காணாதவைகளை விசுவாசிக்கவும் விசுவாசத்தில் ஜீவிக்கவும் எனக்கு உதவி செய்தருளுங்கள். தேவ வார்த்தைகளை வாசித்து விசுவாசித்து ஆவியிலே பெலனடைய கிருபை செய்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின்வாங்கிப்போவானானால் அவன்மேல் என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார்." (எபிரேயர் 10:38)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஒக்டோபர்
24 சனி

# ஆத்மீக பயணத்தை பொறுமையுடன் ஓடக்கடவோம்!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 127 – 128

**"...விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்;" (எபிரேயர் 12:1)**

பிரியமான தேவப் பிள்ளைகளே! **ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இன்றும் உங்களுக்கு ஆசீர்வாதமான நல்ல நாளாகும்படி வாழ்த்துகின்றேன்.** நேற்றைய தின தேவ செய்தியில் தேவனைக் குறித்து விசுவாசத்திலே நாம் வாழ வேண்டும் என்பதை அறிந்துக் கொண்டோம். ஏனெனில் தேவனால் அழைக்கப்பட்டவர்களும், தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களுமாகிய மனிதர்கள் **ஆபிரகாம் ஈசாக், யாக்கோபு, தாவீது போன்றவர்கள் தம் வாழ் நாட்கள் முடிவுறும்வரை விசுவாசத்தோடு முன்னோக்கி பயணித்தவர்கள் ஆவார்கள்.**

தேவப் பிள்ளைகளே! தேவனால் தெரிந்துக் கொள்ளப்பட்ட அவர்களிடம் பலவீனங்கள், குறைகள் காணப்பட்டதாக தேவ வசனங்கள் கூறுகிறது. ஆயினும் **கர்த்தர் அவர்களை புறம்பே தள்ளாதபடி முன்னோக்கி நடத்திச் சென்றார்.** ஆவிக்குரியவர்களாகிய நாம் அதே போல் விசுவாசத்துடன் ஆவிக்குரிய பயணத்தில் முன்னோக்கிச் செல்ல வேண்டியவர்களாய் இருக்கிறோம். ஏனெனில் **ஆத்மீக பயணத்தின் முடிவிலே எமக்கு ஜீவகிரீடம் வைக்கப்பட்டுள்ளது. "ஜீவ கிரீடத்தை அபகரிக்கும்படியாய் சத்துருவானவன் பார்த்துக்கொண்டிருக்கிறான்"** என **வெளிப்படுத்தல் 3:11** வெளிப்படுத்துகிறது. இன்றைய எம் பிரதான வசனம் கூறுகிறது விசுவாசத்தை துவக்குகிறவரும், முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோயடே ஓடக்கடவோம் என்பதாக. ஆகையால் **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!**

தேவப் பிள்ளைகளே! **என் முப்பது வருட ஆத்மீக ஜீவியத்தில் அநேக விதமான போராட்டங்கள், பிரச்சினைகள், சவால்கள் ஏற்பட்டது இப்படியான எல்லா சந்தர்ப்பங்களிலும் இயேசுவை மாத்திரம் நோக்கிப் பார்த்து பொறுமையோடு அவர் பின் சென்றேன்.** என்னுடைய சகல துன்பத்திலும், பிரச்சினைகளிலும், சவால்களிலும் பொறுமையோடே சகித்து ஓட்டத்தை ஓடி முடித்தபடியினால் தேவன் என்னை ஆசீர்வதித்தார். ஆகையால் எமக்களித்த இரட்சிப்பின் வாழ்க்கை மிக பெறுமதி வாய்ந்தது என்பதை அறிந்து **சாத்தானுடைய கிரியைகளின் நிமித்தம் ஆத்மீக ஜீவியத்தில் பின் மாற்றமடையாது இயேசுவையே மாதிரியாகக் கொண்டு பொறுமையோடே ஜீவித்து ஆத்மீகத்தில் முன்னோக்கிச் செல்லுங்கள். வெற்றிச் சிறந்த நாள்!**

ஜெபம்

என் தேவனே! பொறுமையோடே ஆத்மீக பயணத்தில் ஓட வேண்டிய அவசியம் என்பதை எங்களுக்கு உணர்த்தியபடியால் நன்றி இயேசுவே! துன்பங்கள், வேதனைகள், உபத்திரவங்களை சகித்து பொறுத்த ஆத்மீக ஜீவியத்தில் ஜெயம் பெற கிருபை செய்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்குமாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது." (பிலிப்பியர் 1:29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஒக்டோபர்
25 ஞாயிறு

## எம் மத்தியஸ்தராகிய இயேசுகிறிஸ்து!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 129 – 130

"புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும்,..."
(எபிரேயர் 12:24)

அன்பார்ந்த தேவப் பிள்ளைகளே! ஜீவனுள்ள தேவன் **இயேசுகிறிஸ்துவின் ஜெயம் தரும் நாமத்தினால் இன்றும் ஜெயம் பெற்று வாழும்படி வாழ்த்துகின்றேன்.** இயேசுகிறிஸ்துவை பின்பற்றுவதன் மூலம் தேவனுடைய பிள்ளைகளாகும் வரப்பிரசாதத்தைப் பெற்று புதிய உடன்படிக்கையை சொந்தமாக்கிக் கொண்ட **நீங்கள் மிக அதிர்ஷ்டசாலியாவீர்கள்!** ஏனெனில் **இயேசுகிறிஸ்து பரலோக பிதாவானவருக்கும் உங்களுக்கும் நடுவில் மத்தியஸ்தராகவும் கிரியை செய்கிறவராக இருக்கிறார்.**

தேவப் பிள்ளைகளே! மனிதன் சுக பெலத்தோடு இப் பூமியில் ஜீவிக்கவும், சமாதானத்தோடு வாழ்க்கை நடத்தவும், **ஆத்துமாவை படைத்து எமக்களித்த சிருஷ்டி கர்த்தரின் அநுக்கிரகமும், கிருபையும் வேண்டும். மனிதன் பாவத்திலே வீழ்ந்தபடியால் தேவன் அவனை விட்டு தூரமாகிப் போனார்.** படைப்பின் தேவனுக்கும், மனிதனுக்கும் மறுபடியும் ஓர் உறவை ஏற்படுத்தும்படியாக இவர்கள் மத்தியில் செயலாற்றும் **ஒரு விடுதலை நாயகன் கர்த்தருக்கு அவசியமாயிருந்தது.** பரிசுத்த வேதாகமத்தில் **யோபு** என்னும் ஒரு மனிதனைக் குறித்து உத்தமனும், சன்மார்க்கனும் தேவனுக்கு பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப் போல் பூமியில் ஒருவனும் இல்லை என்று கூறுகிறது. ஆயினும் **அவனும் சாத்தானுடைய சோதனைக்கு அநுமதிக்கப்படுகிறான். அவனை பரீட்சிக்கும்படியாக சாத்தான் தேவனிடம் உத்தரவு பெற்றுக் கொண்டான். ஆண்டவர் யோபுவின் பொறுமையையும் அவனது விசுவாச வைராக்கியத்தை நன்கு அறிந்தபடியால் அதற்கு அநுமதியளித்தார். ஆயினும் அவனது பிராணன் மீது உன் கையை நீட்டாதே என்றார்.**

தேவப் பிள்ளைகளே! **யோபு** கூறுகிறான் **நான் அவருக்குப் பிரதியுத்தரம் சொல்கிறதற்கும் நாங்கள் கூடி நியாயத்திற்கு வருகிறதற்கும் அவர் என்னைப் போல மனுஷன் அல்லவே என்பதாக.** ஆயினும் **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!** உங்களுக்கும் பரத்தில் இருக்கிற உங்கள் தேவனுக்கும் இடையில் மத்தியஸ்தராய் இருக்கும்படி புதிய ஏற்பாட்டின் மத்தியஸ்தராக இயேசுகிறிஸ்து இருக்கிறார் என்பதை **எபிரேயர் 2:24**இன்படி அறிந்துக் கொள்ளுங்கள். இன்றும் ஆண்டவர் **உங்களோடிருக்கிறார். வெற்றிச் சிறந்த நாள்!**

ஜெபம்

என் இயேசுவே! உங்கள் மகன் இயேசுகிறிஸ்துவை எனக்கும் உங்களுக்கும் இடையில் மத்தியஸ்தராக நியமித்தபடியால் நன்றி! நான் உங்களை விட்டு தூர விலகாதபடி காத்துக் கொள்ளுங்கள். என்னை உம் கரத்தில் ஏந்திக் கொண்டு என்னை ஆசீர்வதித்து வழி நடத்துமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே." (1 தீமோத்தேயு 2:5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஒக்டோபர்
**26** திங்கள்

# இருதயங்களை ஆராய்ந்து அறிகிற தேவன்!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 131 – 132

**"...இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்."** (ரோமர் 8:27)

பிரியமான தேவப் பிள்ளைகளே! இன்றும் உயிரோடிருக்கிறவரான ஜீவனுள்ள தேவனின் இனிய நாமத்திற்கு மகிமை உண்டாவதாக! **நீங்கள் பெற்றுக் கொண்ட இத்தினம் நல்ல நாளாய் அமையுமாறு ஆசீர்வதிக்கிறேன்.** சர்வ பராக்கிரமுள்ளவரும், சர்வ வல்லவருமான எமக்கு உபகாரம் புரிகிறவருமான **தேவ பிதாவானவருடைய பிள்ளைகளாய் திகழும்படி வரப்பிரசாதம் பெற்ற நீங்களனைவரும் அதிரஷ்டசாலிகளே! ஆகையால் உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!**

தேவப் பிள்ளைகளே! எம் தேவனாகிய ஆண்டவர் மனிதன் பார்ப்பது போல் எமது வெளியரங்கமானவைகளை பார்ப்பவர் அல்ல. எம் உள்ளத்தை காண்கிறார் என வேதம் சொல்கிறது. **1 சாமுவேல் 16:7, அதுமாத்திரமல்ல 8:27**இல் "**தேவ ஆவியானவர் இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் என்று அவர் ஆண்டவருடைய பரிசுத்த ஆவியாக இருப்பதால் ஆண்டவருடைய சகல காரியங்களையும் அவர் நன்கு அறிவார் என** கூறப்படுகிறது". அதே போல் எம் உள்ளங்களில் வாசம் பண்ணுகிறவராய் இருப்பதால் எம் இருதயத்தின் காரியங்களை நன்கு அறிவார். மனிதனுக்கு இன்னுமொரு **மனிதனின் உள்ளத்தின் துக்கம், வேதனை, உபத்திரவம் போன்றவற்றையும் அறிந்து கொள்கின்றானா? என்பதை நாம் அறியோம். ஆனாலும் எமக்குள் வாசம் பண்ணும் தூய ஆவியானவர் உண்மையாகவே அறிகிறார்.** அவர் எமக்காய் பரிந்து பேசி **மத்தியஸ்தராய்** விளங்குவதால் **அவருக்கூடாக எம்மை ஆற்றித் தேற்றி ஆறுதல் அளிக்கிறார்.**

தேவப் பிள்ளைகளே! நாம் ஒரு பிரச்சினையை சந்திக்கும் வேளையில் அதற்கு ஒரு மனிதன் உதவியை நாடினோமானால் எம் பிரச்சினை என்ன எதுவென்று ஆரம்ப முதல் அவனுக்கு கூற வேண்டும். ஆனால் **தேவனுடைய உதவி, உபகாரம் பெற வாஞ்சிக்கும் போது தகப்பனே, அப்பா பிதாவே, எனக்கு ஒத்தாசை செய்யுங்கள், என விண்ணப்பம் பண்ணும் போது ஆவியானவர் சகலவற்றையும் அறிந்து எம்மிடம் எதுவும் கேளாது அவர் எமக்கு ஒத்தாசை, உபகாரம் செய்வார். தேவ சித்தம் என்னவென்று அறிகிறவராய் இருப்பதால் எமக்கு அதன்படி வாழ வழிகாட்டி நடத்துவார். வெற்றிச் சிறந்த நாள்!**


ஜெபம்

என் நல்ல மேய்ப்பரே! உங்கள் தூய ஆவியானவர் இருதயங்களை ஆராய்ந்து அறிகிறவராய் இருக்கிறார். அவர் என்னுள் இருப்பதால் என் இருதயத்தின் சிந்தனைகள் காரியங்களை விசாரித்து ஆசீர்வதித்து உமக்குள் ஜெயம் கிருபை செய்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்." (பரி.யோவான் 14:16 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஒக்டோபர்
27 செவ்வாய்

# நீதிமானுடைய பாதையை செம்மையாக்கும் நீதியின் தேவன்!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 133 – 134

**"நீதிமானுடைய பாதை செம்மையாயிருக்கிறது; மகா நீதிபரராகிய நீர் நீதிமானுடைய பாதையைச் செம்மைப்படுத்துகிறீர்."** (ஏசாயா 26:7)

ஜீவனுள்ள தேவனை நமஸ்கரிக்கும் தேவப் பிள்ளைகளே! **அவருடைய திரு நாமம் இன்றும் உங்களை வளம்பெறச் செய்வதாக என வாழ்த்துகின்றேன்.** பரலோகத்தில் வாசம் பண்ணும் எங்கள் சிருஷ்டிகரும் என் தேவாகிய ஆண்டவர் **நீதியின் தேவனாயிருக்கிறார்.** நாம் ஒவ்வொருவரும் **அவர் மீது விசுவாசம் கொள்ளும் போது அவர் எம்மை நீதிமானாகக் கருதுவார்.** தேவ வசனம் **ஆதியாகமம் 15:16**இல் **"ஆபிரகாம் கர்த்தரை விசுவாசித்தான் அதை அவர் அவனுக்காக நீதியாக எண்ணினார்"** என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தேவப் பிள்ளைகளே! நீங்களும் ஆபிரகாமைப் போல் **பரலோக பிதாவை விசுவாசித்து நடப்பீர்களேயானால் அவரைப் போல் நீதிமானாய் திகழ்வீர்கள்.** புதிய ஏற்பாட்டிலே **1 கொரிந்தியர் 3:16**இல் **உன் சந்ததி இவ்வளவாயிருக்கும்** என்று சொல்லப்பட்டபடியே தான் அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாவதை நம்புகிறதற்கு ஏதுமில்லாதிருந்தும் அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான். ஆகையால் அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டதென்பது அவனுக்காக மாத்திரமல்ல நமக்காகவும் எழுதப்பட்டிருக்கிறது. **ரோமர் 4:18,22,23 உலகில் பாவிகளாக அநீதியாக ஜீவித்த எம்மை நீதிமான்களாய் மாற்றியது, பரலோக தேவன் மீது நாம் கொண்ட விசுவாசத்தினாலேயாகும். அதுவே உண்மையானது என்பதை நாம் இப்போது அறிவோம்.**

தேவப் பிள்ளைகளே! இன்றைய தினத்தின் பிரதான வசனம் **"நீதிமானுடைய பாதை செம்மையாயிருக்கிறது மகா நீதிபரராகிய நீர் நீதிமானுடைய பாதையைச் செம்மைப்படுத்துகிறீர்." ஏசாயா 26:7** என்பதாகும். ஆகையால் நீங்கள் உங்கள் பாதையைக் குறித்து கவனமாக இருங்கள். செம்மையான பாதையில் நடப்பதென்பது ஆத்மீக பிள்ளைகளாகிய உங்கள் வாழ்வினைக் குறித்து ஒருவருக்கும் குறை சொல்ல இடமளிக்காதபடி, உங்கள் வாழ்க்கை குற்றமற்றதாய் இருக்க வேண்டும். **நீங்கள் தேவ வசனங்களின்படி ஜீவிப்பீர்களாயின் மாசற்றவர்களாய் வாழ முடியும்.** நீங்கள் நீதிமானாய் காணப்படுவீர்களானால் **நீதியின் தேவனாகிய ஆண்டவர் உங்களோடிருந்து, உங்கள் பாதையை செம்மைப்படுத்துவார். அப்பொழுது உங்கள் வாழ்க்கை வெற்றிச் சிறந்த வாழ்க்கையாக அமையும். ஜெயம் தரும் நாள்!**

ஜெபம்

என் தேவ பிதாவே! நீங்கள் நீதியின் தேவனாக இருக்கிறீர்கள் நான் உங்கள் மீது விசுவாசம் கொள்ளும் போது நான் நீதிமானாக மாற்றப்பட்டேன். நீங்கள் என் பாதையை செம்மைப்படுத்தி நான் என் வாழ்விலே ஜெயத்தை பெற்றுக் கொள்ளும்படியாக எனக்கு உதவி செய்யுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"அவர்கள் முதிர்வயதிலும் கனி தந்து, புஷ்டியும் பசுமையுமாயிருப்பார்கள்." (சங்கீதம் 92:15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஒக்டோபர்
28 புதன்

# உங்கள் உள்ளத்தின் வேண்டுதல்களை நிறைவேற்றும் தேவன்!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 135 – 136

**"அதற்கு ஏலி சமாதானத்துடனே போ; நீ இஸ்ரவேலின் தேவனிடத்தில் கேட்ட உன் விண்ணப்பத்தின்படி அவர் உனக்குக் கட்டளையிடுவாராக என்றான்."** (1 சாமுவேல் 1:17)

எனக்கு பிரியமான தேவப் பிள்ளைகளே! ஜீவனுள்ள தேவன் **இயேசுகிறிஸ்துவின் வல்லமை நிறைந்த நாமத்தினால் இன்றும் உங்கள் வாழ்வினிலே ஜெயம் பெற்று மகிழ்ந்திருக்கும்படி வாழ்த்துகிறேன்.** வான மண்டலங்களிலும், பூமியின் கடையாந்தரங்களிலும் பூமியின் கீழும் கிரியை செய்யும் வல்லமையுள்ள ஒரே நாமத்தைக் கொண்டவரான இயேசுகிறிஸ்துவை அறிந்தவர்களும் **அவரையே நமஸ்கரிப்பவர்களாகிய நீங்கள் பாக்கியவான்கள்!** இப் பூமியல் அவரது இப்பரிசுத்த நாமத்திற்கு நிகர் யாதொன்றுமில்லை. **நீங்கள் அவரது நாமத்தினால் பரலோகப் பிதாவிடம் எதைக் கேட்டாலும் அவர் அதை உங்களுக்கு அருளுவார்.**

தேவப் பிள்ளைகளே! எமது இன்றைய செய்தியின் தலைப்பு வசனத்தில் குறிப்பிடப்படுவது என்னவெனில் **ஏலி என்னும் ஆசாரியன் அன்னாள் என்னும் ஒரு ஸ்திரிக்கு சொல்லிய வார்த்தைகளாகும்.** கர்த்தருடைய ஆலயத்தில் **அன்னாள் என்றும் ஸ்திரி மனங்கசந்து மிகவும் அழுது கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணி தன் இருதயத்திலே பேசினாள்.** அவளுடைய உதடுகள் மாத்திரம் அசைந்தது. அவளுடைய சத்தம் கேட்கவில்லை. **அவள் கர்த்தருடைய சந்நிதியில் அவளுடைய இருதயத்தை ஊற்றி ஜெபித்தாள். இதைக் கண்ட ஆசாரியனாகிய ஏலி சமாதானத்துடனே போ நீ இஸ்ரவேல் தேவனிடத்தில் கேட்ட உன் விண்ணப்பத்தின்படி அவர் உனக்கு கட்டளையிடுவாராக என்றான்.** ஏனெனில் அவளுடைய கர்ப்பத்தை கர்த்தர் அடைத்திருந்தார். ஆயினும் அன்றைய தினம் ஜெபித்து விட்டு விசுவாசத்தோடும், சந்தோஷத்தோடும் சென்றாள். **ஒரு வருடம் கடந்த போது அவள் கர்ப்பந்தரித்து ஒரு குமாரனைப் பெற்றாள்.**

தேவப் பிள்ளைகளே! நாம் ஜெபிக்கும் ஜெபங்களுக்கு பதில் கிடைக்காது போகிற சந்தர்ப்பங்களும் உண்டு. **நாங்கள் உபவாசித்து அழுது ஜெபித்து மிகவும் எதிர்பார்ப்போடு ஏறெடுக்கும் ஜெபங்கள் கூட நிராகரிக்கப்பட்டு பதில் கிடைக்காமல் போவதுண்டு.** ஆண்டவரிடம் பதில் பெறும்படியான எம் முயற்சிகள் தோல்வியடையவதுண்டு. **அன்னாள் என்னும் ஸ்திரி ஏலி என்னும் ஆசாரியன் கூறிய வார்த்தைகளைக் கேட்டு விசுவாசத்தோடு சந்தோஷமாக எதிர்பார்ப்புடன் ஜீவிக்கும் போது ஏற்ற காலத்தில் தேவன் அவளுடைய வேண்டுதலை நிறைவேற்றினார்.** நீங்களும் அன்னாளைப் போல் ஆண்டவரை விசுவாசித்து நம்பிக்கையுடன் மகிழ்ச்சியாய் இருங்கள். **உங்களை அவர் ஆசீர்வதிப்பார். மனமகிழ்ச்சியின் நாள்!**

ஜெபம்

என் தேவனே! அன்னாளின் வேண்டுதலுக்கு செவி கொடுத்து அதை நிறைவேற்றியவரே! இன்றும் ஜீவனுள்ளவராய் இருப்பவரே! நான் உம்மை முழுவதுமாய் விசுவாசிக்கிறேன். விசுவாசத்துடனே உங்கள் சமூகத்திலே எனக்கு மறு உத்தரவு அருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அவர் உமது மனவிருப்பத்தின்படி உமக்குத் தந்தருளி, உமது ஆலோசனைகளையெல்லாம் நிறைவேற்றுவாராக." (சங்கீதம் 20:4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஒக்டோபர்
**29** வியாழன்

## இல்லாதவைகளை இருக்கிறவைபோல் அழைக்கும் தேவன்!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 137 – 138

**"...அவன் தான் விசுவாசித்தவருமாய், மரித்தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிறவருமாயிருக்கிற தேவனுக்கு முன்பாக நம்மெல்லாருக்கும் தகப்பனானான்."** (ரோமர் 4:17)

கர்த்தருக்கு அருமையான தேவப் பிள்ளைகளே! **ஜீவனுள்ள தேவனுடைய நாமத்தால் இன்றைய தினமும் உங்களுக்கு நன்மை நிறைந்த நாளாய் அமையுமாறு வாழ்த்துகின்றேன். "சத்தியத்தை அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையக்கும்"** என்று இயேசுகிறிஸ்து வெளிப்படுத்தியதன் பிரகாரம் சத்தியத்தின் தேவனைக் குறித்து அறிந்த நீங்கள் மிக அதிர்ஷ்டசாலிகளே! **(பரி.யோவான் 8:32)**

தேவப் பிள்ளைகளே! **ரோமர் 4:17**இல் எழுதப்பட்டிருக்கிறபடி **"இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக்கிறவரான தேவன் உங்களோடிருப்பதால்" உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!** உலக மனிதர்கள் அவர்கள் வாழ்க்கையில் சந்திக்க நேரிடுகிற **பிரச்சினைகள், துன்பங்கள், தொல்லைகள், கஷ்டங்கள் உபத்திரவங்களின் போது சொந்த முயற்ச்சியினால் விடுதலையைப் பெற பிரயாசப்படுவார்கள்.** அப்படி முடியாது போகுமிடத்து இன்னுமொருவரின் உதவி ஒத்தாசையை அல்லது தயவை நாடுவார்கள். இல்லாவிட்டால் அந்நிய மனிதர்கள் மூலமாகவோ அல்லது தத்தமது பக்தி மார்க்கத்திற் கூடாகவோ விடுதலையைப் பெற முயற்சிக்கிறார்கள். உலக ரீதியில் வாழுபவர்களை மாத்திரமல்ல **ஆவிக்குரியவர்கள் கூட அனுதின வாழ்வினிலே ஏற்படும் கஷ்டங்கள், உபத்திரவங்கள், துன்பங்கள், பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாய் இருக்கிறார்கள்.** ஏனெனில் உலகிலே அந்தகாரம் கிரியை செய்கிறபடியால் வெளிச்சத்தின் பிள்ளைகளாய் இருக்கிற எங்களுக்கு விரோதமாக அந்தகாரத்தின் அதிபதியாகிய சாத்தான் எம் ஆத்மீக ஜீவியத்திற்கு விரோதமான காரியங்களை செயல்படுத்துகிறான்.

தேவப் பிள்ளைகளே! ஆயினும் **நீங்கள் அஞ்சாதிருங்கள்! வல்லமை மிகுந்த தேவ மனிதனான பவுல் அடிகள் சொல்கிறார்.** "என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலன் உண்டு" என்பதாக. அவரில் செயல்பட்டவரான பிதாவானவருடைய தேவ ஆவியானவர் உங்களிலும் கிரியை செய்கிறார் என்பதை அறிவீர்களா? **எம் ஆத்மீக வாழ்க்கையிலே நாம் சந்திக்கின்ற இன்னல்கள், தொல்லைகள், கஷ்டங்கள், பிரச்சினைகள், சவால்கள் போன்றவைகளால் நாம் சிறைப்பட்டு அழிந்து போகாதபடி எமக்கு வழிகாட்டி எம்மை பெலப்படுத்தி முன்னோக்கி அழைத்து செல்பவர் எம்மை அழைத்த தேவனே! நீங்கள் தைரியமாயிருங்கள்.** இல்லாதவைகளை இருக்கிறவைகளாக அழைத்து உங்களை ஆசீர்வதிக்கும் **வெற்றிச் சிறந்த நாள்!**

**ஜெபம்**

அன்பான இயேசுவே ! இல்லாதவைகளை இருக்கிறவைகளாக அழைக்கும் தேவ பிதாவானவரே! என் வாழ்வினை உங்கள் கரங்களில் ஒப்புக் கொடுக்கிறேன். உங்களையே நோக்கிப் பார்க்கிறேன். என் வாழ்விலும் இல்லாதவைகளை இருப்பதாக எங்களை ஆசீர்வதிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"...அவர் சர்வத்தையும் உருவாக்கினவர்; இஸ்ரவேல் அவருடைய சுதந்தரமான கோத்திரம்; சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம்." (எரேமியா 10:16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஒக்டோபர்
30 வெள்ளி

## பலத்த கோட்டையாக தேவன் உங்களை பாதுகாக்கிறார்!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 139 – 140

**"கர்த்தர் நல்லவர், இக்கட்டுநாளிலே அரணான கோட்டை; தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார்."** (நாகூம் 1:7)

அருமையான என் தேவப் பிள்ளைகளே! நல்லவரும் கிருபை நிறைந்தவருமான **ஜீவனுள்ள தேவனின் நாமத்தில் வல்லமையால் இத்தினம் சுப நாளாய் அமையுமாறு பிரார்த்திக்கின்றேன்.** இன்றைய தினத்திலும் உங்கள் வாழ்வில் **அநேக பிரச்சினைகள், உபத்திரவங்கள், துன்பங்கள், பாதிப்புகள் என எத்தனை இன்னல்கள் உங்களை சூழ்ந்துக் கொண்டாலும் நீங்கள் பயப்படாதிருங்கள்!** ஏனெனில் இன்றைய பிரதான தேவ வசனம் **நாகூம் 1:7**இல் **"கர்த்தர் நல்லவர் இக்கட்டு நாளிலே அரணான கோட்டையென்று** கூறுகிறது. **ஆகையால் உங்கள் உள்ளத்தைப் பெலப்படுத்திக் கொள்ளுங்கள், தைரியப்படுங்கள்."**

அன்பானவர்களே! அரணான கோட்டை என்பது எல்லாவகையிலும் எதிரிகளுடைய ஆக்கிரமப்பிலிருந்து எமக்கு சம்பூரண பாதுகாப்பை அளிக்கும் ஒரு ஸ்தானம் ஆகும். **பரி.வேதாகமம் சங்கீதம் 9:9**இல் தாவீது ராஜா வெளிப்படுத்துகிறார் **"சிறுமைப்பட்டவனுக்குக் கர்த்தர் அடைக்கலமானவர் நெருக்கப்படுகிற காலங்களில் அவரே தஞ்சமானவர்"** என்று. இதன்படி பார்ப்போமாகில் தேவனை ஏற்றுக் கொண்டு அவரையே நம்பி வாழும் எம்மை அவர் எந்நேரமும் எல்லா வகையிலும் பாதுகாக்கிறார் என்பதை அறியலாம். இன்றும் நீங்கள் சந்தித்துக் கொண்டிருக்கும் **எல்லா பிரச்சினைகளும் எவ்வளவு விசாலமானதாக இருந்த போதிலும் பயப்படாதிருங்கள்.** தேவ பாதத்தில் ஜெபத்தை ஏறெடுங்கள். உங்களால் நினைத்துக் கூட பார்க்க முடியாதபடி பிரச்சினைக்கு விடுதலையை பெற்றுத்தர தேவனுக்கு செயல் **புரிய முடியும். இவற்றின் மூலம் உங்கள் ஆத்மீக வாழ்க்கைக்கு எந்த தீங்கும் ஏற்படாதபடி சகல வழிகளிலும் பாதுகாப்பளிப்பார்.**

தேவப் பிள்ளைகளே! சில வேளைகளில் நாம் யாரென்றே அறியாதவர்களால் கூட **பிரச்சினைகள், சவால்கள், உபத்திரவங்கள் வரலாம். நீங்கள் எதிர்பாராதபடி ஏற்படக் கூடும். நீங்கள் எதிர்பாராமல் திடீரென சோதனைகள், வேதனைகள், பிரச்சினைகள்** ஏற்படுமாயின் அதை உங்கள் **தேவனுடைய கண்கள் காண்கின்றபடியால்** அவைகள் உங்களை அனுகும் முன்னமே அவர் அவற்றை அறிந்து உங்கள் வாழ்க்கையில் நிறைவேறாத வண்ணம் தடுத்து நிறுத்துவார். ஏனெனில் **நீங்கள் அவருடைய விலைமதிக்க முடியாத பொக்கிஷமாக இருக்கிறீர்கள்.** அவர் உங்களை தெரிந்துக் கொண்ட முதல் உங்களுக்கு **அவர் பலத்த கோட்டையாயிருந்து பாதுகாப்பளிக்கிறார். நீங்கள் பலவீனனாக, அல்லது பலவானாக இருக்கலாம் ஆனாலும் உங்களோடிருக்கும் தேவன் பலத்த கோட்டையாயிருந்து உங்களை பாதுகாக்க வல்லவர். இன்றைய தினம் பாதுகாத்து ஜெயம் தரும் நாள்!**

ஜெபம்

என் அன்புள்ள ஆண்டவரே! நீங்கள் என் பலத்த கோட்டையாய் இருக்கிறீர்கள். எதிராளியான சாத்தானுடைய சோதனைகளில், ஆபத்து வேளைகளில் என்னைப் பாதுகாத்து ஆத்மீக ஜீவியத்தில் ஜெயத்துடன் வாழ எனக்கு தயை கூர்ந்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது." (சங்கீதம் 91:10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஒக்டோபர்
31 சனி

## எம்மை நிரப்பும் தேவ மகிமை!

வேதவாசிப்பு
சங்கீதம்
அதி: 141 – 142

**"...இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப்பண்ணுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்."** (ஆகாய் 2:7)

என் அன்பான தேவப் பிள்ளைகளே! **ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்துவின் அநுக்கிரகத்தினால் இம்மாதம் முழுவதும் நன்மையையும், கிருபையையும் பெற்று மகிழ்ச்சியாக இருப்பீர்களென விசுவாசிக்கின்றேன். இம்மாத இறுதி தினமான இன்றும் அவருடைய வல்லமை உங்களை நிரப்பும்படியாக வாழ்த்துகின்றேன்.** ...இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப் பண்ணுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்கிறார். இவ் வார்த்தைகள் தேவனுடைய ஆலயத்தை பற்றி சொல்லப்படவில்லையா? என எண்ணுகிறீர்களா? **உங்கள் இருதயம் கலங்ரகதிருப்பதாக!**

தேவப் பிள்ளைகளே! ஆத்மீக தேவப் பிள்ளைகளாகிய நாம் ஒவ்வொருவரும் **அவருடைய ஆலயமாயிருக்கிறோம்.** ஏனெனில் அவரது **தூய ஆவியானவர் எம் உள்ளே வாசம் பண்ணுகிறார்.** வேதாகமத்தில் பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனை குறித்து அநேக இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. பரிசுத்த ஆவியானவர் தாமே தேற்றரவாளனாக நமது உள்ளங்களில் செயல்புரிகிறார். **"என் நாமத்தினாலே பிதா அனுப்பப் போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்கு போதித்து நான் உங்களுக்கு சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்"** என்பதாக **பரி.யோவான் 14:26**இல் கூறப்பட்டுள்ளது. இன்னுமாக **பரி.யோவான் 14:17 "உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும், அறியாமலும் இருக்கிறபடியால் அவரை பெற்றுக் கொள்ள மாட்டாது. அவர் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால் நீங்கள் அவரை அறிவீர்கள்"** என்றுரைக்கிறது.

தேவப் பிள்ளைகளே! **எமது பரலோக பிதாவானவருடைய பரிசுத்த ஆவியானவர் எம்மில் வாசம் பண்ணுகிறார் என்பது நிச்சயமே. "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும் தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?"** என்பதாக **1 கொரிந்தியர் 3:16** கூறுகிறது. ஆகவே நீங்கள் பரலோக பிதாவிற்கு சொந்தம் என்பதும் ஆண்டவருடைய **தூய ஆவியானவர் உங்களில் வாசம் பண்ணுகிறதை விசுவாசித்து உங்கள் வாழ்வினை அவரின் விருப்பத்திற்கேற்ப மாற்றி அமைத்துக் கொள்ளுங்கள். அவர் உங்கள் மீது பிரியம் வைத்து உங்கள் மீது இறங்கி உங்களை தமது வல்லமையில் நிரப்பி ஆசீர்வதிப்பார். ஆசீர்வாதத்தின் நாள்!**


ஜெபம்

பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே! உங்கள் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட நாள் முதல் உங்கள் தூய ஆவியானவர் என்னுடைய உள்ளத்தில் வாசம் பண்ணுகிறபடியால் நான் பாக்கியவானாக இருக்கிறேன். உங்கள் மகிமையில் என்னை நிரப்புங்கள் என்று இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"தேவனைக்குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது; தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்." (ரோமர் 1:19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜனங்கள் முன்னிலையில் அற்புதங்களையும், வல்லமானவைகளையும் நிகழ்த்தி நான் ஜீவிக்கின்றேன் என்பதை இன்றும் உறுதிப்படுத்துகின்ற இரட்சகர் இயேசுகிறிஸ்துவின் கிரியைகளை இன்றும் மனிதர்கள் முன்னிலையில் செயல்படுத்த முடியாவிட்டால் உங்களுக்குள் இருப்பது தேவன் பேரில் ஆழமற்ற பக்தி மாத்திரமே. அது பரிசுத்த வேதாகமத்தில் ஏசாயா 44ம் அதிகாரத்தில் குறிப்பிடுகின்றபடி நீங்களும் இயேசுவை அறியாத மனிதர்களைப் போல் உங்கள் பக்தியை மாத்திரம் காட்டுவதேயாகும். ஆகையால் இயேசுகிறிஸ்துவின் பேரில் கொள்ளும் பக்தியே விசுவாசம் என மனிதர்கள் பிழையாகப் புரிந்துக் கொள்வார்கள் அல்லவா?



தேவப் பிள்ளைகளே! யாராக இருப்பினும் ஆத்மீக பிள்ளைகள் உபவாசமிருந்து, ஜெபிக்கின்ற வேளை பிசாசைத் துரத்த முடியும். அது ஒரு விஷேட வரப்பிரசாதம் அன்று, ஏனென்றால் பரிசுத்த வேதாகமத்தில் 1கொரிந்தியர் 12:4-11வரை எழுதியருப்பதால் இது ஒரு வரம் இல்லை. ஆனாலும் எந்தவொரு ஆத்மீக தேவ பிள்ளையும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தை விசுவாசத்தோடு சொல்கிற போது அசுத்த ஆவிகள் அலைகழிக்கப்பட்டு சரீரத்தை விட்டு அகன்று போகும். அப்படி அற்புத அடையாளத்தோடு தேவ ஊழியம் செய்யும் போது அதற்காக அதிகமதிகமாக தம்மை பிரதிஷ்டை பண்ண வேண்டுமென்பதோடு வியாதியஸ்தரை குணமாக்குதல், பிசாசுகளைத் துரத்துதல் போன்ற தேவ ஊழியங்களுக்கூடாக தேசத்தில் அழிந்து போகின்ற அநேக ஆத்துமாக்களை தேவனுக்குள் கொண்டு வருவதற்கு தீவிரமாக செயல்பட முடியும். பிரதான சீஷனான பவுல் கூறுவதன்படி உங்களைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய உங்களுக்குப் பெலன் உண்டு என்பதை மறவாதீர்கள். அத்தோடு நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் எல்லா வேளையிலும் தேவனுக்கு முதலிடம் அளிக்கும் போது ஆத்மீக வரங்களினால் நிரப்பப்படுவீர்கள்.



தேவப் பிள்ளைகளே! ஆத்மீக தேவ பிள்ளையான உங்களுக்கு தேவனின் வல்லமையையும், வரங்களையும் பெற்றுக் கொள்ள பரிசுத்த வோதாகமத்தில் ஏசாயா 40:31இல் கூறுவதன்படி தேவ சமூகத்தில் ஜெபத்தோடு காத்திருத்தல் அவசியமாகும். நீங்கள் ஜெபிக்கும் அனைவரோடும் சேர்ந்து ஒருமனப்பட்டு ஆமென், அல்லேலுயா என உரத்தச் சத்தமிட்டு கூறும்போது மாத்திரம் தேவ வல்லமை உங்கள் உள்ளார்ந்த மனுஷனை நிரம்பச் செய்யாது. இதைத்தவிர அழிந்து போகின்ற ஆத்துமாக்களைக் குறித்து உள்ளத்தில் வேதனையோடு அவர்களை மீட்டுக் கொள்ளும்படியாக தேவனே! நீர் எனக்குள் அற்புத அடையாளங்களை நடத்தி கிரிகை செய்யும் என நீங்கள் உபவாசத்தோடும், கண்ணீரோடும் தேவனின் சமூகத்தில் அமர்ந்து ஜெபிக்கும் போது தேவ ஆவியானவரின் வல்லமை உங்களுக்கூடாக செயல்படத் தொடங்கும் என்பது எனது ஆத்மீக அனுபவமாகும்.



தேசத்தில் அழிகின்ற ஆத்துமாக்கள் காரணமாக கண்ணீரோடு ஜெபம் செய்யும் தேவ மனிதர்கள் மத்தியில் ஞாயிறு ஆராதனை மாத்திரம் சம்பிரதாயமாக நடத்தி தேவனுடைய பாதத்தில் ஜெபம், தியானம், தேவனோடு பேசுதல் என்பவற்றிற்கு தமது நேரத்தை கொடுக்காது சுயநலமாக சில ஒழுங்கு முறைகளை கடைபிடிப்பவர்களும் உண்டு. ஆனாலும் அவர்களைக் குறித்து ஒன்றும் கூறவில்லை. உலகம் முடிவினை நோக்கி போய்க் கொண்டிருக்கின்றபடியால் எங்கள் தேவன் அவர்களோடு பேசுவார் என எதிர்ப்பாக்கின்றேன்.

☞ அட்டைப்படத்தின் பின் பக்கம் பார்க்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அன்பார்ந்தவர்களே! விண்ணப்பத்தின் ஆவியோடு ஜெபம் பண்ணும் நீங்கள் உங்கள் தேவ சபைகளில் சபைப் போதகர்கள், உடன் ஊழியர்கள் அனைவரும் தேவனின் வரங்களினால் நிரப்பப்பட்டு வல்லமையைப் பெற்று ஊழியம் செய்யும்படியாக ஜெபம் பண்ணுங்கள். பரி.யோவான் 14:12இல் கூறியிருப்பதாவது 'மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். நான் என் பிதாவினிடத்தில் போகிறபடியினால் என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான். இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்' என்றாகும். அதன்படி இரட்சிக்கப்படாத மற்ற இனத்தவர்கள் முன்னிலையில் அற்புதங்கள், அடையாளங்கள் என்பவற்றோடு நிகழ்காலத்தில் எல்லா தேவ சபைகளிலும் தேவனால் கொடுக்கப்பட்ட ஊழியங்களையும் செய்வதே மிகவும் ஏற்றதொன்றாகும். எனது அபிலாஷையும் அதுவேயாகும்.



**ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் கிருபையும் ஆவியும் உங்களோடிருப்பதாக!**

**கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!** **போதகர் ஏ.ஜே.ஜோசப்**

## எங்கள் சபைக்கு வருவதற்கான வீதியின் வரைப்படம்




**ஜீவ மன்னா வாசக கட்டணங்கள், சந்தோஷ காணிக்கைகள், காசு கட்டளைகள் என்பனவற்றிற்கு!**

**பணம் அனுப்ப**

கிராண்டபாஸ் தபால் காரியாலயம்
போதகர் ஏ.ஜே.ஜோசப் என்னும் பெயருக்கு அனுப்புங்கள்.

**பணம் வைப்பிலிட**

போதகர் ஏ.ஜே.ஜோசப்
கணக்கு இலக்கம் 8076982701
கொமர்ஷல் வங்கி, கிராண்ட்பாஸ் கிளை
பணத்தை வைப்பிலிட்டு பற்று சீட்டை எமக்கு அனுப்பவும்


போதகர் ஏ.ஜே.ஜோசப்

**ஜீவ மன்னா தின தியான புத்தகத்தை தபால் மூலம் ஒவ்வொரு மாதமும் பெற்றுக் கொள்ளலாம்.**

**விலாசத்தை அனுப்பவும்**

R/N:- QD/66/NEWS/2015


# இயேசு கைவிடார் சுவிசேஷ பணியகம்

**இல 33/1, புதிய களனிப் பால வீதி, கொழும்பு – 14.**

☎ 011-2334865 ✆ 071-4922929

✉ arulandu.joseph@gmail.com 🌐 www.jesusnf.org


இல 33:1 புதிய களனிப் பால வீதி, கொழும்பு -14, ஜீவ மன்னா குட் நியூஸ் பிரிண்டஸ் அச்சகம் மூலம் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org